தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-9

துலாம் தி. பி. கககக (1968-நவம்பர்)

பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நன்றியும் நம்பிக்கையும்.

தமிழக (தி. மு. க.) அரசு செய்த-செய்யவிருக்கின்ற சில அரிய செயல்களில் தலையாயது தமிழ்நாட்டின் பெயர் மாற்றமாகும். இதற்காக இக் கழகத்தையும், இதன் தலைவர்களையும், இதன் மூலவரான திரு. அண்ணா அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். நடுநிலை பிறழாது தென்மொழி எழுதிய ஆசிரியவுரைகள் எல்லாவற்றிலும் இவ்வாசிரியவுரை மிக்க மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் எழுதப்பெறுகின்ற ஒன்றாகும். இதற்கு முன்னிருந்த பேராயக்கட்சி செய்யத் தவறிய பல செயல்களில் இப் பெயர்மாற்றம் மிகப்பெரிய செயலாகும். தமிழுணர்வுக்கும், தமிழர் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்த இப் பெயர் மாற்றத்தையும் இன்னோரன்ன சில அருஞ்செயல்களையும் செய்

யத்தவறிய காரணத்தாலேயே பேராயக்கட்சியின் ஆட்சி மக்களால் தூக்கியெறியப்பெற்றதெனினும் மிகையில்லை. வெறும் பெயர் மாற்றத்தில் என்ன இருக்கின்றது என்று ஏளனமாகவும் செருக்குடனும் கேட்கப்பெற்ற கேள்விக்கான விடையே கடந்த பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தலைகீழ் மாற்றமாகும். இப் பேருண்மையை பேராயக்கட்சியின் எல்லாத் தலைவர்களும் ஒப்புக்கொண்டே ஆகல் வேண்டும்.

தமிழர்களை ஒருமுகப் படுத்துவதற்கும் அவர்களின் அடிமைத்தனை நீக்கத்திற்கும் அடிப்படையான மொழியுணர்வுக்கு இத் தமிழ்நாடு பெயர்மாற்றம் முடியாக விளங்கும் என்பதை உண்மைத்தமிழர் எவரும் மறுக்கார். இப் பெயர் மாற்றத்திற்காகத் தம் ஆருயிரையும் இழந்த திரு. சங்கரலிங்கனார் அவர்களின் ஆவி உண்மையிலேயே இக்கால் முழுநிறைவுறும் என்பதில் துளியும் ஐயமில்லை. தமிழர்களின் உள்ளுணர்வைப் புரிந்துகொண்ட ஓர் அமைச்சரவையால்தான் தமிழர்களின் முன்னேற்றத்தைப் படிப்படியாகச் செய்ய முடியும். இப் பெயர் மாற்றத்தைச் செய்வித்த இத் தமிழக அரசை நாம் பல்லாற்றானும் நன்றிகூறிப் பாராட்டுவதுடன், அது மேலும் செயத்தக்க சில நல்வினைகளையும் கூறி, அவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றோம்.

உலக மொழிகளுக்கெல்லாம் முந்தியதும் மூலமானதுமான நம் அரும்பெருந் தமிழ்மொழி இத் தமிழக அரசினர் ஆட்சிக் காலத்தேதான் இனி தலையெடுக்க வேண்டும். அதற்காக நாம் செய்யத்தக்க பல அரிய வினைப்பாடுகளில் அடிமுதல் முடிவரை ஆராய்ந்து செப்பமாக நம் தமிழக வரலாறு எழுதப்பெறல் வேண்டுவது இன்றியமையாததாகும். அடுத்தது உலகின் முதல் தாய்மொழியாக உள்ள தமிழுக்கு இதுவரை இல்லாததும் இனிமேல் செய்யத் தக்கதுமான அருஞ்செயல் சொல்லியல் வேர்ச்சொல் அகரமுதலியின் தொகுப்புப் பணியாகும்.

இவ்விரண்டு பணிகளையும் செய்யத்தக்க மொழியறிவும், ஆராய்ச்சித் திறனும் கொண்டவரும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி நுண்மாண் நுழைபுல மிக்கவருமான மொழிஞாயிறு திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களை இப்பணிக்கு நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென இவ்வரசையும், இதன் அமைச்சர்களையும், முதல்வர் திரு. அண்ணா அவர்களையும் பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம். திரு. பாவாணர் அவர்களுக்கு இக்கால் அறுபதாண்டுகள் நிறைவுற்றன. உடல் தளர்ச்சியும், ஏந்துக்குறைவும் கொண்டு

வாழ்வின் இறுதி நிலையில் இயங்கும் இச் செந்நாப் புலவரின் ஈடற்ற மொழியறிவு முழுமையும் நம் மொழிக்கும், நாட்டிற்கும் கட்டாயம் பயன்பட்டே ஆகல்வேண்டும். அவரன்றி வேறு ஒருவரால் அவ்வரும் பெரும் பணி செய்யத்தக்கதன்று. எனவே அவரின் எஞ்சிய வாழ்நாளை இதிற் கழிக்குமாறு நம் அரசு செய்யுமானால், இவ்வரசின் முன்னோக்குந் திறனை எதிர்காலத் தமிழ்மக்கள் என்ஞான்றும் போற்றிப் புகழுவர் என்பதுறுதி. வெறும் புகழ்கருதி மட்டுமன்றித் தம் கடமையுணர்ந்தும் இவ்வரசு பாவாணர் அவர்களைப் பயன் படுத்திக்கொள்ளுமென்று மலையத்துணை நம்பிக்கை கொண்டுள்ளோம், 'செய்தக்க செய்யாமையானும் கெடும்' என்னும் குறளுரையை நினைவில் வைத்து நம் நம்பிக்கையை நிறைவேற்றுமாறு தூய நடுநிலைத் தமிழன்பர்களின் சார்பாகத் தென்மொழி திரு. அண்ணா அவர்களை வேண்டிக் கொள்கின்றது. பிற அறிவுப் பணிகளிலெல்லாம் இப்பணி தலையாயது என வணக்கத்துடன் அவர்க்கு நினைவூட்டிக் கொள்கின்றோம்.

-பெருஞ்சித்திரன்-

நம்பிக்கையும் நன்றியும்!

அண்மையில்–அஃதாவது, திருச்சி மாநாட்டிற்குப்பின் சில செய்திகள் நம் செவிக்கு வந்தன. முன்பு தென்மொழியொடு தொடர்பு கொண்டிருந்த-தென்மொழியின் பணிகளுக்காக நம் குடும்பத்தோடு குடும்பமாகத் தங்கியிருந்து பணியாற்றிய சிலர், இக்கால் அத்தொடர்பைக் காட்டிப் பலவாறு பொய்யையும் புளுகுகளையும், புதிதாக இணைகின்ற தென்மொழி அன்பர்களிடம் விரித்துப்பேசி வருவதாகவும், சிலர் அவற்றால் மயக்கமுற்றுச் சில விளக்கங்களை அறிய விரும்புவதாகவும் நமக்கு அன்றாடம் மடல்கள் வந்து கொண்டுள்ளன. இவற்றில் ஓரிரண்டை நாம் தென்மொழியில் வெளியிட்டு மிருந்தோம். இம் மடல்களைப் பற்றியோ, இவற்றிலுள்ள செய்திகளைப் பற்றியோ, இச் செய்திகளைக் கூறிவரும் அன்பர்களைப் பற்றியோ நாம் சிறிதும் வருத்தமோ, பதற்றமோ கொள்ளவில்லையாயினும், இவற்றைக் கேள்வியுற்றுக் குழப்பமடைந்திருக்கும் அன்பர் ஒரு சிலர்க்காகவேனும் சில செய்திகளை நாம் விளக்க விரும்புகின்றோம்.

இப்படிப்பட்ட செய்திகள் நமக்கு வரத் தொடங்கியவுடனேயே தென்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய சில அகநிலைச்

செய்திகளை நாம் தெளிவாகவும் ஓரளவு முழுமையாகவும் வெளியிட வேண்டுமென்று விரும்பி, 'என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்' என்ற கட்டுரைத் தொடரைச் சென்ற இதழில் தொடங்கினோம். நம் இயக்கம் வேறு; தென்மொழியின் இயக்கம் வேறன்று. தென்மொழி புறத்தே ஓரிதழாக வெளிவரினும் அகத்தே எம் உணர்வு, உயிர் எல்லா வற்றுள்ளும் கலந்துள்ளது. தென்மொழியை வாங்கிப் பெற்றுத் தொடர்ந்து படித்து வருபவர்க்கே ஒருவகையான நல்லுணர்வும் கிளர்ச்சியும் உள்ளத்தே எழுமானால், அதனைக் கருவாக்கி உருவாக வெளிப்படுத்தும் எமக்கு எத்தகைய உணர்வும் கிளர்வும் உள்ளத்தே கால்கொண்டிலங்கும் என்பதை அறிவினர் அறிவர். எனவே என் இயக்கம் பற்றிய கட்டுரையில் முன்னுள் தென்மொழித் தொடர்பாளர் கள் கிளப்பி விடுகின்ற எல்லா வகையான ஐயங்களும் தெளிவாக விளக்கப்பெறும். இருப்பினும் முன்கூட்டிச் சிலவற்றை மேலோட்ட மாகவேனும் சொல்லியே ஆகவேண்டியுள்ளது. இவை தொடர்பான பிற விளக்கங்களும் அக்கட்டுரையில் கூறப்பெறும்.

வளர்ந்து வருகின்ற ஓரியக்கத்திற்கும், இயக்கத் தொடர்பான ஓரிதழ்க்கும் இத்தகைய சூழல்கள் அமைவது இயல்பே. தமக்குகந்தன வாகக் கருதப் பெறுவன, தமக்காகாதனவாக உணரப்பெறின், தாம் அவற்றின்மேல் புரையும், பழியும் கூறி, அவற்றின் நிறைக்கும் சீர்க்கும் கறைசேர்க்க முயல்வதும் இயல்பே. தமிழகத்தும் தமிழர்க ளிடத்தும் இது தொன்றுதொட்டு இருந்துவரும் பழக்கம். நெடுந் தொலைவு நடக்கவேண்டிய ஒருவனுக்குக் கைத்தடியும்கூட கனமான பொருளே. கைத்தடியே கனக்குமானால் உடன் வருபவர்களின் புளுகு மூட்டைகள் எத்துணையளவு கனக்கும் என்பதை நாம் தொடக்கத் தேயே உணர்ந்திருந்தோம். அதனால்தான் தென்மொழிக்குத் தலை கொடுப்போம்; தோள்கொடுப்போம்; கைகொடுப்போம் என்று அவ் வக்கால் வந்து இணைந்தவர்களெல்லாரும், தம் தலையும் தோளும் கையும் துவண்டும் ஒதுங்கியும் போன பின்னரும் தன்னந்தனியேமாக நின்றுநின்றேனும் நாம் கண்ட இலக்கை நோக்கி நடையிடுகின்றோம். இந்நடையைத் தடுத்து நிறுத்த வல்ல மதுகையும், வல்லாண்மையும் எவர்க்கும் இல்லை. தென்மொழியை நடத்தமுடியாதபடி பொருள்வலி குன்றினும், எம் உயிரியக்கம் உள்ளவரை எம் தொண்டு துவளாது; நோக்கு மாறாது; போக்கு திசைதிரும்பாது. இவை நிற்க.

தென்மொழியின் தொடக்கக் காலத்திருந்து இதுவரை தொடர்ந்து அதன் இயக்கத்து ஊன்றியிருந்தவர் ஒருவருமிலர். இடையிடையே இணைந்துகொண்ட ஓரிருவரும், பற்பல காரணங்களுக்காகப் பற்பல திசைகளில் விலகியவர்கள். அவர்தாம் புறத்தே கூறிய —கூறிவருகின்ற காரணங்களுக்கும் அகத்தே உள்ள காரணங்களுக்கும் உள்ள தொடர்பை இறைவன் ஒருவனே அறிவான். (இவை பற்றி யெல்லாம் 'என் இயக்கத்துள்' விரிவாக எழுதுவேன்.) இனி, விலகிச் சென்றவர்களுள் எவரும் இனிமேல் தென்மொழியின் இயக்கத்திற்குத் திரும்பிவரும் நோக்கத்தோடு சென்றதாக, நான் கருத முடியவில்லை. வந்துகொண்டிருந்தவர் ஒருவர் வராமலே நின்று போனார். 189 நாட்களுள் கட்டாயம் திரும்பிவிடுவோம் என்றுசென்ற இரண்டு மாணவர்கள் பொதுவுடைமைக் கட்சியால் கவரப்பெற்றார்கள். ஒருவர் ஏன் எதற்கென்றே விளக்காமல் ஊர் புறப்பட்டார். அன்பாலும் அறிவாலும் கெஞ்சிக் காரணத்தைக் கூறுமாறு கேட்டும், முரண்டு பிடிக்கும் குழந்தை போலவே தென்மொழிக் குடும்பத்தைத் துறந்தார்; மீண்டும் மாறிய குழந்தைபோல் இரண்டொரு திங்களில் வந்தார்; இருந்தார்; பின் சென்றவர் அன்பு காரணமாக ஓரிரு முறைகள் வந்தாரே அன்றித் தொண்டுக்கென்று பின் திரும்பவே இல்லை. தொண்டென்று வந்த ஒருவர் அக்கம் பக்கத்துச் சிறுமிகள்முன் விழியும் கையும் நீட்டியமையால் அறிவுறுத்தி விலக்கப்பெற்றார். பின் சிறையிலுள்ள நம்மைப் பார்க்க வந்தவர் நம்முடனேயே மீண்டும் தென்மொழிக்கு வந்தார். திருந்தியதாகவும், இனி அத்தகைய பிழைகள் வாராவென்றும் கூறி யமர்ந்தார். உளம் மாறினார் என்று உவந்து வரவேற்றோம். ஆறேழு திங்கட்குப்பின் தம்மால் அவ்வுணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை யென்றும், பிறவாறும் கூறி வெளியேறினார். தாம் அங்கு மேற்கொண்டு இருந்தால் எமக்கு ஊறு விளைவிக்கக்கூட முன்வர நேரும் என்பதும் அவர் உரைத்தவற்றுள் ஒன்று. முன்னிருந்த ஓரிருவர்க்காக அவர் பரிந்துரையாகக் கூறியவற்றையும் பின்னர் என்னியக்கத்துள் விளக்குவேம். அதன்பின் மேற்கொண்டு கல்விகற்கவென்று கூறிப்போன ஒருவர் பிறரால் தூண்டப்பெற்றும் பொருளுதவி பெற்றும் இதழொன்று தொடங்கினார். இடையிடை இணைந்து நடுநிற்பார்போல் சில பூசல்கள் விளைவித்தார். இறுதியில் அவரும் அகற்றப்பட்டார். இவர் எல்லாரின் மனவியல்களும், வினை இயல்புகளும் பின்னர் விரிவாகக் கூறப்பெறும். எவரிடத்தும் எக்காலத்தும் நாம் உண்மையையே பற்றுக்கோடாகக் கொண்டு நின்றோம்; நிற்கின்றோம்; இனிப்போமாதலையால் எவ்வினைவு பற்றியும் நாம் அஞ்சவில்லை. எழ

விளக்கம் முழுவதுமாக வெளிவருதற்குள் இவர்தம் பூசல்களும் பொய்யுரை திரிபுரைகளும் இருந்து கொண்டுதாம் இருக்கும்.

இனி, இவர்கள் பரப்பிவருவனவாகக் கூறும் செய்திகளுள் நாம் தென்மொழியைப் பொதுவுடைமையாக்கத் தயங்குகின்றோம் என்பதும், நம்முடன் பணியாற்ற விழைபவருடன் நாம் மிகக் கடுமையாகவும் நடுநிலையிகந்தும், பொய்யாகவும், போலியாகவும் இன்னும் பல்வாறுகவும் நடந்து கொள்கின்றோம் என்பதும், நம் பெண்ணைத் தென்மொழித் தொண்டர்களுள் ஒருவர்க்கேனும் திருமணம் செய்து தராமல் ஏமாற்றுகின்றோம் என்பதும், இவர்களுள் ஓரிருவரிடத்தும் பிறரிடத்தும் பலகாலங்களிலும், பலவாறும் பணங்களை ஏமாற்றிப் பறித்தோம் என்பதும் நம் செவிகளுக்கெட்டியவற்றுள் முகாமையுடையனவாகும். இன்னும் எவ்வெவ்வாறு கூறிவருகின்றனர் என்பதை எல்லாம் வல்ல இறைப் பேராற்றலே அறியும். நம் எண்ணங்களையும் எழுத்துகளையும்இவ்வண்ணம் திருப்பி இதுபோன்ற செய்திகளைத் தென்மொழியில் எழுதும் சூழ்நிலையை உருவாக்கி வருகின்றனர் என்பதன்றி, இவைபோன்ற பூசல்களுக்கு யாம் எள்ளத்துணை துயரமோ, எறும்பத்துணை நடுக்கமோ கொண்டேமல்லேம் என்பது அவர்களுக்கும் தெரிந்த ஒன்று. எனவேதாம் அடிமுடி அளவீடாக 'என்னியக்கம்' எழுதப் பெறுகின்றது. அக்கட்டுரை இவர்களுக்காகவோ, இவர் பூசல்களினின்று எம்மைத் தடுத்து நிறுத்திக் கொள்வதற்காகவோ எழுதப் பெறுவதன்று. எதிர்காலத்து எம்போல் வினையாற்றப்புகும்பொதுத்தொண்டர்கள்–நாட்டுக்கோமொழிக்கோ நன்றுற்ற முனையும் தந்நலமற்றோர், அவருக்குறுதுணையாக நிற்க வருவார் தந்தம் பண்பறிந்து ஆற்றுக்கடை, நன்றுற்றலுள்ளும் எங்ஙன் தவறுளதாகிவிடும் என்பதை உணர்ந்து கொள்ளப் பெறுவதற்கே எழுதப் பெறுவதாகும். நாமும், நம் மனைவி மக்களும் தந்நலமற்ற பொதுவுணர்வால் எம்மை அணுகியோரிடமும் சார்ந்தோரிடமும் பட்ட, படுகின்ற பெருந்துயரையும் தொல்லைகளையும் அவர் படுலாகாது.

இனி, தென்மொழியைப் பொதுவுடைமை யாக்குவது என்ற கருத்தை நாமே முன்வந்து சொன்னேமேயன்றி இவர் போலியர் எமக்குரைத்து நாம் அதனை நன்றெனக் கொண்டதனுலன்று. தமக்குவழிகாட்டியும், தொண்டு செய்தும் தம் வாணாளைப் பயனுள்ளதாகக் கழிக்கும் தூயோரிடம் நம் தமிழ்மக்கள் எத்துணையளவு நம்பிக்கையும் நன்றியும் காட்டுதல் வேண்டும் என்பதற்கும், பொது நல் உணர்வு எத்தகைய மேனிலையில் கடைப்பிடிக்கப் பெறுதல்

வேண்டும் என்பதற்கும் ஓரெடுத்துக்காட்டாகத் தென்மொழி அமைப்பு விளங்க வேண்டும் என்று, நாம் என்று கருதினேமோ அன்றே அது முற்ற முடிந்த முடிவாக்கப்பெற்றது. இம்முடிவை, எம் உடலினின்று நொடிதோறும் விலகி இப்புடவியெங்கும் உலாவரும் ஒரு நுண்ணணுவும், மண்ணுக்கும் விண்ணுக்கும், கோளுக்கும், கதிருக்கும் எண்ணற்ற உடுக்கூட்டத்திற்கும் என்றும் எப்பொழுதும் உரையா நிற்கும். உணர்வுப் பித்துக்கொண்டாரன்றி உணர்வுத் தெளிவு கொண்டார் எவரும் எம் உள்ளுணர்வுகளில் ஒருசிறிதும் பழுதுகாணார். எம் பின்றைக் காலத்துச் செய்யவிருக்கும் இவ்வரும் பணிபற்றி ஈண்டு வக்கணைபேசி வருவார்க்கு, நாம் நகைப்பதன்றி, மிகைப்பட வுரைத்திட யாதுளது?

இனி, நாம் என்றும், எங்கொடியும் கொண்ட கொள்கைக்கும், விழைந்த வினைப்பாட்டுக்குமே கருத்தும் இயக்கமும் கொண்டிருப்ப தால், அவ்வழியில் கண்டிப்பும், கடுமையும் மேற்கொள்ளவேண்டி உள்ளது. கனிவாலும், அன்பாலும் ஆற்றவேண்டிய வினைகளும் காலங்களும் இல்லாமல் இல்லை. அவ்வாறில்லாமல் போனால் இத் தகையோர் வந்த ஓரிரு நாட்களன்றி மாதக்கணக்கிலும் ஆண்டுக் கணக்கிலும் எம்முடன் வினையாற்றியிரார். மேலும் வினையற்ற ஓய் வான ஒருசில பொழுதுகளில் நாம் மட்டுமன்றி நம் மனைவியும் மக் களும் இவர் தம்முடன் நகைத்தும், அளவளாவியும், சோலையும், ஆறும், கடலும் கண்டு குதித்தும், முழுகியுவந்தும், ஒருங்குறைந் தும், ஒருங்குறங்கியும், ஒரேவட்டிலில் பிசைந்துண்டும் அன்பே தொண்டாக, தொண்டே வாழ்வாக இருந்தோமா அல்லமா என் பதை இவரிவர் உள்ளங்களும் இவர்போலும் எம்முடன் தொடர் புற்று எம் துன்பத்தும் துயரத்தும் இன்றும் பங்குகொண்டு நிற்கும் ஒருசில தூய தமிழ் நெஞ்சங்களும் என்றும் முழங்கி நிற்கும்! இக் கால், நடுநிலையிகப்பும், பொய்யும், புரையும் கலந்தவாகக் கட்டி யுரைக்கும் இவர்கள் அன்று எழுதியனவும் உரைத்தனவும் எம் தூய தொண்டுளத்தை என்றும் வெளிப்படுத்தப் போதிய சான்றுக ளாக இன்றும் எம்மிடம் உள்ளன. அவையாவும் தென்மொழி வர லாற்றின் அழியாத நினைவெச்சமாக என்றென்றும் விளங்கும்.

இவையன்றி, இவர்களின் பணங்களை ஏமாற்றிப் பறித்ததாக இவர்கள் கூறும் கூற்றை இறைவன் பொறான். இவர்களே விரும்பி "அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று மனமும் மொழியும் குழைந்து நீட்டிய பொழுதுகளிலுங்கூட அவற்றை உள்ளமும் உயி ரும் நடுக்கமுற வாங்கி, எமக்கென்று ஒரு சல்லிக்காசுதானும் செல விடாது, முற்றும் தென்மொழிக் கணக்கிலே வரவு செய்து வைத்

திருப்பதை எவரும் எந்நேரத்தும், என்றும் அடையா நெடுங்கதவம் கொண்ட தென்மொழி வினைவகத்திற்கு நேரே வந்து காணலாம். என்றுவது ஒருநாள் அவை திருப்பித்தரும் நோக்கத்திற்காகவே பெற்றுக்கொள்ளப் பெற்றனவே யன்றி வாங்கப் பெற்றன அல்ல. எழுதப்பெறும் ஒவ்வோரெழுத்துக்கும் உரைக்கப் பெறும் ஒவ்வோரோசைக்கும் நுண்ணியதாக, மணிக்கணக்காக இரவென்றும் பகலென்றும், பனியென்றும் குளிரென்றும் பாராது, யாமுரைத்த விளக்கங்களைச் செவிமடுத்தும் உணர்ந்தும் அறிவறிந்தும் கொண்ட இவர்கள் எனக்காக வென்றுகிலும், எம் பெண்டு பிள்ளைகட் கென்றுகிலும் வாங்கிவந்து தந்த சில தின்பண்டங்களைத் தவிர எம்முடலில் இவர் தாம் அன்பளிப்பாகவோ, நன்றியாகவோ உவந்தளித்த ஒருகாசின் தூசும் உள்நுழைந்திராது என்பதை எம் மானவுணர்வின்மேல் சூளுரைத்துக் கூறிக்கொள்கின்றேம். உணவு வட்டித்துக் கொண்டிருக்கும் பொழுதே வந்த ஓர் அன்பர்க்கும் உணவு படைக்காமல் படைக்கவா என்று எம்பால் கேட்டறிந்து போகவந்த எம் துணைவியைச் சினந்து அறைந்த எம் பொதுமை யுணர்வை அறிந்தும் அறியாது பழுதுரைப்பார்க்கு நாம் மொழிவது ஒன்றுமில்லை.

இறுதியாக, எம் மூத்தமகள் திருமணம் பற்றியும் வாய்வலித்தக்காரர் ஒருவர், தம் நாக்கடிப்பாக வருவார் போவாரிடத்தும் வாய்மென்று வருவதாக அறிந்து மிகவும் வியக்கின்றேன். திருமணம் பேசப்பெற்றதும், ஒப்பப்பெற்றதும் உண்மை. ஆனால் எந்தச் சூழலில், எவருக்கு, என்பவற்றையும், ஏன் அது நடவாது நின்றுபோனது என்பதன் அகக் காரணத்தையும் அறிய விரும்புவார் அதனை அறிய விறலி(!) மலைக்குச் செல்லுதல் வேண்டா. கடலூருக்கே வரலாம். திரும்பிப்போக வழிச்செலவு தென்மொழியினின்று தரப்பெற்று, அச்செலவு "இன்னரால் குழப்பப்பெற்ற இன்னர் கடலூர் வந்து விளக்கம் பெற்றுப் போகையில் பெற்றுக்கொண்ட செலவுத் தொகை' என்று கணக்கெழுதப்பெறும். இக்குறிப்பு எதிர்காலப் பொதுத் தொண்டர்க்கேனும் ஓர் எச்சரிக்கையாக அமையட்டும்

இறுதியாக, தென்மொழி யன்பர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது ஒன்று. நம் வழிகாட்டிகளிடமிருந்து நாம் பெறு

கின்ற தொண்டு வேலைக்காக நாம் கோடி கோடியாக அள்ளிக் கொடுக்க வேண்டா. நாம் அவர்கள் செலவில் நம்பிக்கையோடும் நன்றியுணர்வோடும் நடந்து கொண்டாலே போதுமானதாகும். பொதுத்தொண்டு கத்திமுனையின்மேல் நடப்பது போன்ற அருஞ் செயலாகும். ஊதியநேரம் போக, வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு "தொண்டு" அளப்பது வேறு; வினைப்பாட்டில் தன்னை மூழ்குவித்துக் கொண்டு தன்னை அழித்துக்கொள்வது வேறு. துறவிபோலிருந்து அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் .. பிற... பிற... எல்லாவற்றையும் நீக்கி அகத் தொண்டு செய்ய முயல்வது வேறு. இத்தகைய அகப்புறப் பகைகள், கரவுகள், ஏமாற்றுகள், பித்தலாட்டங்கள், புறம்நட்டு அகம் வேர்க்கும் போலித் தோற்றங்கள், அரசியலார் ஆணை–அதிகாரங்கள், வாணிகர்களின் ஏமாற்று முறைகள், பொருளியல், வாழ்வியல் போராட்டங்கள் முதலியவற்றின் ஊடே புகுந்து தாம் கொண்ட கொள்கைக்காகவும் வினைப்பாட்டுக்காகவும், தொண்டுக்காகவும், தம்மையும் தம் மனைவி மக்களையும் பாழடித்துக் கொள்வதென்பது வேறு. முடிவாகச் சொன்னால் துறவியர் பாழி(ஆசிரமங்)களில் நிலவும் அமைதியை நாடியதன்று எம் செலவு. தமிழர்களிடமிருந்து மாய்ந்துபோன, பறிக்கப்பெற்ற உரிமையுணர்வை, உயர்வான வாழ்வியல், அரசியல், குமுகாயவியல் உரிமைகளை மீட்டுக் கொடுப்பதாகும், அது. இச்செலவின் இறுதியிடம் அரியணையாகவு மிருக்கலாம்; எரியணையாகவும் இருக்கலாம். கோழைகளுக்கும் தீட்டிய மரத்தில் கூர்பார்க்கும் இரண்டக உள்ளம் கொண்டோர்க்கும் எம் படையில் இடமில்லை. எம்மைத் தொடர்பவர்களிடம் நாம் எதிர்பார்ப்பன நம்பிக்கையும் நன்றியுணர்வுமேயாகும்!

-பெருஞ்சித்திரன்.

உலகத் தமிழ்க் கழகம்

- உங்கள் ஊரில் உலகத் தமிழ்க் கழகத்தின் கிளைக்கழகத்தைத் தோற்றுவித்து விட்டீர்களா?
- பத்து உறுப்பினர்கள் சேர்ந்தால் ஒரு கிளைக்கழகத்தைத் தோற்றுவித்துவிட முடியும்.
- இதுபற்றி உடனடியாக உங்கள் மாவட்ட அமைப்பாளரிடம் தொடர்பு கொள்ளுங்கள்.
- உண்மையான தமிழ்த் தொண்டுக்கு உலகத் தமிழ்க் கழகத்தில் சேருங்கள்.



மேகலை

'காதம்பரி'-யும் பாவேந்தரும்!

பெருமதிப்பிற் குரிய ஐயா,

ஆகஃச்டுத் திங்கள் ''காதம்பரி'' என்ற திரையேட்டில் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனுரைப் பற்றிக் கேட்கப்பட்டிருந்த கேள்வியை யும், அதற்கு இறுக்கப்பட்ட விடையையும் கண்டு நான் மிக்க கொதிப்படைந்தேன். அதன் ஆசிரியை திருவாட்டி. சரசுவதிபாசு. ''காதம்பரி'' ஆசிரியை 49-A. தென்மேற்கு போக் சாலே தி. நகர், சென்னை-5க்கு யான் விடுத்த கண்டனமடற் படியைக்கீழே தந் துள்ளேன். எந்தத் தமிழனும் கண்டு கொதித்தெழ வேண்டிய செய்தி இது.

கேள்வி: பாரதிதாசன் உயிரோடிருந்தால்......?

—இராதாகண்ணன், ஆண்டாங்கரை.

விடை: பிரமாதமான இலக்கியப்படைப்பு எதுவும் அவரிடமிருந்து நமக்குக் கிடைக்காது. அவரது புரட்சிக் கவிதைகளெல் லாம் ஒரு பீரியடோடு சரி. கடைசிக் காலத்தில் கவிஞருக் குக் கற்பனையே வறண்டுவிட்டது. போகிறபோக்கில் கன்னு பின்னு வென்று பிதற்றிவைத்து விட்டல்லவா போயிருக் கிருர்!

நான் எழுதிய மடல் இது:

''பெண்ணே! உன்னை (உடன்பிறந்தாள்) சகோதரி என விளிக் கக்கூட என் நெஞ்சு கூசுகிறது. பெண்களின் அம்மணப் படங்களை வெளியிட்டுத் தமிழரின் (வலிமைக்குறைவை) பலவீனத்தைப்பயன் படுத்திப் பிழைக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் உனக்கு இலக் கியத்தைப் படிக்கும் அல்லது சுவைக்கும் திறன் அற்று விட்டது போலும். இனக்கவர்ச்சிப் படங்களையும், கேவலமான திரைப்பட நடிகைகளின் படுக்கையறைப் படங்களையும் வெளியிட்டுக் காசு தேடும் கீழ்மைப் பண்பைக் கொண்ட உன்னுல் பாவேந்தர் பாரதி தாசனுரின் குப்பைத் தொட்டியிலுள்ள தாளைக்கூடப் படித்துப் புரிந்துகொள்ள இயலாதுதான். ஆகஃச்டு இதழில் பாரதிதாசனு

ரைப்பற்றி நீ எழுதிய (விடையை) பதிலைத் திரும்பப் பெற்றுக்கொள். கதிரவனைக் கண்டு ஒன்றுன் பகடி செய்தாற்போன்று உள்ளது உன் ஓலம். பெண்ணடிமை மீட்கப் பெரும்பாடு பட்டவர் அவர். கைம்மை ஒழிக்கக் காலமெல்லாம் உழைத்தார். நன்றி இல்லையா? போகிற போக்கில் கன்னு பின்னு என எழுதுவது யார்? நீயா பாவேந்தரை எடைபோடுவது? நரி அரியேற்றை எள்ளுவதா? காதம்பரியில் நீ வெளியிடும் படங்கள்போல உன்னுடைய படத்தை வெளியிடுவாயா? உன் (உடன்பிறந்தாள்) சகோதரி, அன்னை, படங்களை அரை அம்மணமாக வெளியிடுவாயா? நீ ஒரு பெண். இருந்தும் பெண்மையை மறந்துவிட்டாய். அழகன்று இது. நாய்க்கு மலந்தின்னத்தான் தெரியும். தேங்காய் தின்னத் தெரியாது. அருள்கூர்ந்து உன் அரை வேக்காட்டு அறிவை இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்தாதே. வறண்டது "கவிஞரின் கற்பனை" அன்று. உன் ஒழுக்கம்; பெண்மை; கற்பு; உன் பெருமை. குறைகண்டால் பொது மேடையிட்டுப் பேசலாம். தீர்ப்பை மக்களே வழங்கட்டும். பெண்ணை மதிப்பவன் நான். மதிப்பைக் காத்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு."

ஐயா, அப்பெண்ணிற்குத் தக்க இடித்துரை தரவேண்டுகிறேன். வணக்கம்.

—சே கோச்சடை, கல்லல்— 14—10—68.

உலகத் தமிழ்க் கழகம்.

அன்புள்ள ஐயா! வணக்கம். தாங்கள் உலகத் தமிழ்க் கழகச் செயலராகத் திருச்சி மாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பட்டமைக்குத் தமிழ்த் தாய்க்கு நன்றி கூறுகிறேன். இன்றைய தமிழகம் இருக்கும் நிலையில் வினைத் திட்பமும், மனத்திட்பமும் ஒருங்கே பெற்ற, தன்னலமற்றபேராண்மை மிக்க தமிழர் ஒருவர் உள்ளார் என்றால் அவர் தாங்களே! மொழிக்கென அரிமா முழக்கம் முழங்கி, தமிழகமெங்கும் தமிழ் உணர்வுக் கனலைப் பரப்பி, இளையோர், மாணவர், மகளிர், முதியோர் ஆகிய அனைவோர்க்கும் தனித்தமிழ்ப் பற்றினையும் தமிழக விடுதலையில் அசைக்க முடியாத நம்பிக்கையினையும் வளர்த்துத் தனித்தமிழ் நாட்டின் விடுதலைப் படைக்குத்தானைத் தலைவராய் அமர்ந்துள்ளீர்கள். தங்களின் ஆற்றலும், மொழியாண்மையும், பகைவர்க்கும், பார்ப்பனருக்கும் மண்லடயடியாக விளங்கி எதிர்காலத் தமிழ்மாந்தர்க்கு வழிகாட்டியாகத் தங்களைத் தூக்கி நிறுத்திட உதவுவன.

—த. வளங்கோ, புதுவை (துலை உ௨—கக)

மாணவரேறு மறைமலை!

மதுரை மாணவரேறும், தனித்தமிழ் மறவரும், 'குறள்நெறி' ஆசிரியருமாகிய திரு. மறைமலை (க.மு.) அவர்கள், அண்மையில் ஓர் உந்துவண்டியால் மோதப்பெற்றுப் படுகாயமுற்று, மதுரை அரசினர் மருத்துவ மனையில் பண்டுவம் பெற்று, நலமுற்று வருகிறார். உடலெங்கும் சிராய்ப்புகளும் முகவாய்க்கட்டையில் பெருத்த அடியும் ஏற்பட்டதுடன், அவர் சில பற்களையும் இழக்க நேரிட்டது. இந்நேர்ச்சிக்கு மிகவும் வருந்துகின்றோம். தம்பி மறைமலையை நாம் மருத்துவமனையில் கண்டு கண்ணீர் வடித்து வருந்திய பொழுது அவர் "என் உடலுக்கேற்பட்ட இவ்வூறு பாடு உள்ளத்தைச் சிறிதும் ஊறு படுத்தவில்லை ஐயா; அதனால் வருந்தவேண்டா" என்று எம்மைத் தேற்றியது கண்டு உண்மையிலேயே பெருமிதமுற்றோம். எதிர்பாராது நேர்ந்த இப் பெருந் துயரில் அவருடனும், அவர் குடும்பத்தாருடனும், அவருக்குத் தோளோடு தோளாக நின்று வினையாற்றும் மாணவர்களுடனும் நாமும் பங்கேற்கின்றோம்.

—பெருஞ்சித்திரன்.

தனித்தமிழ் வளர்க்கும் தாளிகைகளில் ஒன்று!

பூஞ்சோலை

ஆசிரியர்கள்: காரை; இறையடியான், காரை. அலீம்.

பாடல்கள், கதைகள். கட்டுரைகளுடன்—உலகத் தமிழ்க் கழகச் செய்திகளையும் தொடர்ந்து தருகின்றது.

தனியிதழ் 25 காசு. ஆண்டுக்கட்டணம் 3 உருபா

பூஞ்சோலை

காரைக்கால்.

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு, கொழும்பு
ஆண்டுக் கட்டணம் உருபா.	2-50	4-00
தனியிதழ் ,,	0-20	0-30

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

இலக்கியம்

நூறுசிரியம்.

-துரை-மாணிக்கம்-

பாடல்—க௫. (உரைத் தொடர்ச்சி)

ஐம்புலன்: ஐந்து புலன் உணர்வுகள் புல-புலர்-புலர்தல்—புலத்தல்—வெளிப்படுதல்-புலம்—புறம்—புறப்படுதல்—புறத்தே தோன்றுதல்—வெளிப்படுதல். உடலின்கண் பொதியப்பெற்ற ஐம்பூத நிலைகளுக்கும் அடிப்படையாகிய உணர்வுகள் வெளிப்பட்டு நிற்றல். புல்—பொல்—பொள்—பொறி. கதிர்மணிகளை வறுத்துச் சூடேற்றுங்கால் அவை பொரிந்து மலர்தலுக்கும் மூலம் 'பொல்' என்னும் சொல்லேயாகும். புல்—பொல்—பொரி—பொரிதல்—உள்ளீடு வெளிப்படல்.

ஐம்புலன்கள் ஆகிய கொழுமுனைகளைக் கொண்ட அறிவாகிய பகடு—ஏர் என்பதாம். ஈண்டு அறிவு ஏராகவும், அவ்வேர் முனைகளாக ஐம்புலனுணர்வுகளும் உருவகிக்கப் பெற்றன. அறிவு முயற்சி ஏரின் உழுதல் முயற்சியாகக் கொள்ளப்பெற்றது. அறிவெனும் ஒரு கூட்டுணர்வு, புலன்களின் முனைப்புகளினின்றே வெளிப்படுதலும், வளர்ச்சியுறுதலும் காண்க. புலன்கள் முனையப் பெறுதவிடத்து அறிவுணர்வு அவ்வழி மழுக்கமுறுதலும் உய்த்துணர்க. புலன்உணர்வின் பற்றுதல் தன்மையே அறிவு முனைப்புக்கு வழியாதலின் அறிவுணர்ச்சி புலன் உணர்வின்றி அமையாதாம் என்க. இவ்விடத்துப் புலன்கள் தங்குமிடமாகிய பொறிகளைக் கூறுது புலன்களைக் குறிப்பிட்டதென்னையெனின் பொறிகள் பழுதுபடுகின்றவிடத்தும் அவ்விடத்துப் புலன்உணர்வு ஊன்றி நிற்குமாகலின் என்க. என்னை? பொறியிலாவிடத்துப் புலன் உணர்வு கூடுமோவெனில், கூடுமென்றும், ஆனுல் அவ்வுணர்வு உடலின் மற்றைய பொறிகளின்வழி செயற்பாடு கொள்ளும் என்றும் உணர்க.

இனி இவ்வறிவென்னும் ஏரைக் கட்டியிழுக்கும் இருவகை முயற்சிகளும் இரண்டு எருதுகளாக உருவகிக்கப் பெற்றுள்ளன. முயல்வும், துணிவும் இணைந்த இரண்டு எருதுகளாக முன்னின்று அறிவியக்கத்தைச் செய்யும பான்மையை ஓர்ந்து உணர்க. உடல் முயன்றாலன்றி அறிவு முனையாது; அறிவும் புலன்கள் ஊன்றினாலன்றி இயங்காது என்பது இவ்வடிகளால் உணர்த்தப்பெறும் உண்மை.

இனி உடல் முயற்சிக்குத் துணைபோவது துணிவு என்க. வேட்கையுள்ள அறிவு அங்காந்து நிற்கும். பொறிகளைத் திருப்பிப் புலன்களை ஊன்றுவிக்கும். உடல் முயலும்; முயற்சிக்குத் துணிவு துணை நிற்கும் என்பதாம். துணிவின்றி முயற்சி சிற்சிலகால் தடைப்பட்டுப் போகும். எனவேதான் இரண்டும் ஒருமித்து நடையிடவேண்டி எருதுகளாக உருவகம் பெற்றன.

வைகலும் உழுது என்பது ஒவ்வொரு நாளும், நாளுக்குரிய பொழுதும் இடையறாது உழுது என்றபடி. வைகுதல்–ஏகுதல், இருத்தல்· எதிர்தல் ஆகிய பொழுதின் முந்நிலைகளையும் உணர்த்தும் ஓர் அரிய சொல். வைகல்–கழிந்த பொழுது–கழியும் பொழுது கழியவரும்பொழுது எனும் முப்பொருளும் படும். படவே எப்பொழுதும் எனப் பொருள் பெறும். நாளும் என்பதற்கும் எந்நாளும் என்றே பொருளாம், எனவே வைகலும் உழுது என்பதற்கு ஒவ்வொரு கழிகின்ற நொடியும், பொழுதும், நாளும் உழுது என்பதுபொருளாம். உழுதல் தொழில் இடையறாது நடைபெறல்வேண்டும் என்பது குறிக்கப்பெற்றது. பயிருழவுக்குப் பொழுது வேண்டுவது போல் அறிவுழவுக்கும் பொழுது வேண்டும் என்பதும், அதற்கு முப்பொழுதும் உரியதாம் என்பதும் கூறப்பெற்றன.

கற்பு நீர் பாய்ச்சி: கல்வி என்னும் நீரைப் பாய்ச்சி. நெஞ்ச நிலத்தில் ஊன்றப்பெற்ற நினைவு என்னும் வித்திற்குக் கல்வி என்னும் நீரைப் பாய்ச்சுதல் வேண்டும், என்பது. கல்வி நீராலன்றி ஊன்றப்பெற்ற வித்து வளர்தற் கியலாதாகலின் அது பாய்ச்சப் பெறுதல் இன்றியமையாதாம் என்க. கற்பு–கல்வி. மனத்தின் வாங்கு ஆற்றலையே நினைவு என்கிறோம். அவ்வாங்கு ஆற்றல் கருவும் திருவும் எய்தி மெய்யறிவென்னும் பயிராக வளர்ந்து பெருகுதற்குக் கல்வி என்னும் நீர் பாய்ச்சப் பெறுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பெற்றது.

இனி, உழுசலும், நீரிடுதலும் ஆகிய பின்னைக் காப்பும் தேவை யாகலின், ஒழுகு, நாண், நட்பு, உரன் ஆய இவை நான்கு புறமும் சூழப்பெறும் காப்பீடாகக் குறிக்கப்பெற்றன.

மெய்யறிவு வேளாண்மைக்கு ஒப்புரவாண்மை, அன்புடைமை, அறமுடைமை, நடுவுநிலைமை, பொச்சாவாமை, புறங்கூறாமை, பொய்யாமை முதலிய கூறுபாடுகளின் கடைப்பிடிப்பாகிய ஒழுங்கும், அறிவு மனம், சொல், வினை முதலியவற்றின் கண் சேரும் குற்றங்களுக்கும் அவை மேல்வரும் பழி, கரிசுகட்கும் உயிர் நடுங்குதலாகிய நாணமும், அன்பு, அறிவு, இன்பு, பண்பு ஆகியவற்றிற் பொருந்தியாரது நட்பும், துன்பிற்றுவ்ளாமை, இன்பிற் கெதிரேறல், சூழ்விற் கொளிந்துய்தல், பகைவர் உளம் வேறல் முதலியவற்றிற் காய மனவுரனும்-நான்கு புறத்தும் அமைக்கப்பெறும் வேலிகளாம் என்க.

ஐய!- என்று விளித்தது தலைவனாகிய இறைவனை.

நீ பயந்த வாணாள் தாயம்: நீ அருளிய வாழ்நாள் என்னும் உரிமைக் காலம். பயந்தது-பயத்தது-பயன்பெறத் தந்தது.

உயிர்கள் பயன்பெறும்படி தந்த உரிமைக் காலமாகிய இவ் வாழ்நாளில் செய்ய வேண்டுவன யாவை என்பவற்றைக் குறித்ததாம் இப்பாட்டு.

தாயம்-உரிமை. இது தாய்வழியாக முதன்முதல் பெறப்பட்டதாகலின் இப் பெயர் பெற்றது. உலகின் மாந்த நாகரிகத்தின் முந்தைய உரிமை தாயுரிமையே ஆகலானும், தமிழர் மாந்த இனத்தின் தொடக்க நாகரிகத்தார் ஆகலானும், 'தாயம்' முதலிய தாய்முதல் குறித்த சொற்கள் தமிழ் மொழிக்கு நிறைந்த வழக்காதல் காண்க.

தாயம்: உரிமை-உரிமையுள்ள நிலம்-உரிமைபெற்ற நாடு-உரிமை பெறுசுற்றம்-முன்னைய வைப்பு-உரிமையால் பெறும் மேலாண்மை-பொருள்பயன்-ஈகம்-ஈகை, அடைக்கலம் முதலிய சொற்பொருட்களையும், தாயதி, தாயத்தார், தாயேடு, தாயோலை, (மூலஏடு), தாய்க்கால், தாய்க்கட்டு, தாய்க்கண், தாய்க்காணி, தாய்க்கிழங்கு, தாய்க்கழகம், தாய்ச்சீட்டு, தாய்ச்சீலை (கோவ

ணம்), தாய்ச்சுவர், தாய்ப்பாளை, தாய்முதல், தாய்வழி, தாய்வேர் முதலிய தலைமைப் பொருள் கொண்ட எண்ணிறந்த சொற்களை யும் ஓர்ந்துணர்க!

தந்தைப் பெயரை முன்னடையாப் பெற்றுத் தலைமைப் பொருளும் உரிமைப் பொருளும் தரும் சொற்கள் தமிழில் இல்லா மையே தமிழின் முன்மையையும்' பிறமொழிகளின் பின்மையை யும் தெளிவாகக் காட்டுவனவாம்.

வையம்: சகடம்–வண்டி–உருளை–உருளைபோல் உருள்வ தால் உலகம்.

இவ்வுலக உயிர்கள் உய்தல்வேண்டிச் செய்யப்பெறும் மெய் யறிவு வேளாண்மை என்று குறிக்கப்பெற்ற தென்க.

அயர்வின்றி—அயர்ச்சியின்றி.

மெய்யின் விளைபுகு உணர்வோம்: மெய்ம்மையின் வேளாண் மையைச் செய்யப் புகுந்த உள்ளுணர்வுடையேம். நிலத்துக்கண் பயிரும், புலத்துக்கண் அறிவும் விளைவிக்கும் முயற்சியே மாந்த உயிர்களுக்கிட்ட வாழ்வு நோக்கமாம் என்றும், அந்நோக்கம் நடைபெறத் துணைபுரிவதே மெய்யறிவினர்க்கிட்ட இறைக் கட் டளையாம் என்பதும் உணர்த்தப்பெற்றன.

செய்பயன் முற்றும் நின் அளி அன்றே!: மெய்யுணர்வுடை யார் செய்யும் முயற்சியும், அம்முயற்சியின் பயனும் நின் ஊக்க மும், விளைவுமே யாகுமன்றி அவர்தம் விளைவன்று என்பது கூறப்பெற்றது. கருவிகளும், அக்கருவிகளுக் கமைந்த கரணி யங்களும் அக்கருவி, கரணியம் இரண்டாலும் விளைந்த கருமங் களும், அக் கருமங்களின் பயனும் அவற்றிற்கு உரிமை நல்கிய வர்க்கே ஆகுமன்றி அவ் வினைப்பாடுகளுக்கு உறுப்பாக அமைந் தார்க்கு என்றும் ஆகா என்னும் உண்மை ஈண்டு விளக்கப் பெற்றதென்க.

பயன் கருதாத உயிர்த்தொண்டே அறிவின் பயனும் என்ப தும்; அவ்வறிவு விளைவுக்குக் கல்வி முதலிய முயற்சிகளில் ஈடு படுவதே என்றும் செயத்தக்கதென்பதும் உரைக்கப்பெற்றன.

இப்பாட்டு புறத்திணையும் பொருண்மொழிக் காஞ்சியென் துறையுமாகும்.

திருச்சிராப்பள்ளியில்

திருவள்ளுவர் ஆண்டு கககககக கன்னித்திங்கள் 19,20-ஆம் நாட்களில் (1968, அக்டோபர் 5-6-இல்) தேவர் மன்றத்தில் நிகழ்ந்த

தமிழ்வரலாற்று, தமிழ்க்கழக அமைப்பு மாநாட்டின்போது
ஒப்பியன் மொழிநூற் புலவர், பேராசிரியர்.

திரு. ஞா. தேவநேயப் பாவாணர், க. மு. அவர்கள்

நிகழ்த்திய

தலைமை யுரை.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா யெண்ணவும் படுமோ?"

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

அன்பர்களே!

குறித்த காலத்தில் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்குவது என்பது தமிழர்களிடத்தில் காணுதற்கரிய பழக்கமாகும். ஆனால் ஆங்கிலேயரிடத்தில் காலந்தவறாமை என்னும் இந்தப் பண்பை இயல்பாகவே காணலாம். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், எவ்வளவு முயன்றும்கூட இன்று, நிகழ்ச்சி நிரலிற் குறிப்பிட்ட நேரத்துக்குக் கூட்டம் தொடங்க முடியவில்லை. இதனால், எங்கே என் பேச்சைக் காலம்கடந்து தொடங்கவேண்டியநிலை ஏற்படுமோ என்று அஞ்சினேன்.

ஆனால், இம்மாநாட்டில் தொடக்கவுரை நிகழ்த்துதற்கு அழைக்கப்பட்டிருந்த தவத்திரு. குன்றக்குடி அடிகளார் வராததால், என்னுடைய பேச்சைக் குறித்த காலத்திற்கு முன்பே நிகழ்த்த நேர்ந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

நிகழ்ச்சி நிரலின்படி, என் பேச்சு 11-மணிக்குத் தொடங்கப்பட்டிருக்கவேண்டும். இப்போது 40 நிமையங்களுக்கு முன்னமே தொடங்குகிறேன். இதுவும் ஒருவகையில் நல்லதே.

தமிழ்மொழி கெட்டதற்குக் காரணமே சமயம்தான். ஏனெனில் சமயத்துறையில்தான் முதன்முதலில் ஆரியர்கள் வடமொழிச் சொற்களைப் புகுத்தினர். வடமொழி தேவமொழி யென்றும், அதனை ஒலிமுறை பிறழாமல் ஓதும் ஆற்றல் பார்ப்பனருக்கு அதாவது பிராமணர்க்குத்தான் உண்டென்றும் கூறி, கோவில்களில் வழிபாடுசெய்யும் அதிகாரத்தைத் தங்களுக்கே உரியதாக்கிக் கொண்டனர். இப்படிச் செய்தது கி. மு. 1200 என்று சொல்லலாம்.

பார்ப்பனர் என்று சொல்லும் பொழுது எனக்கு இன்னொருசெய்தி நினைவுக்கு வருகிறது. அஃதாவது, ஆரியர் இந்நாட்டிற்கு வருமுன், பார்ப்பார் அல்லது பார்ப்பனர் என்னும்சொல் தமிழரையே குறித்தது; பிற்காலத்தில்தான் அச்சொல் ஆரியருக்கு உரியதாயிற்று. அவர்கள் வருவதற்குமுன் தமிழ்நாட்டுக் கோயில்களில் ஓதுவார், நம்பியார், பண்டாரம், புலவர் என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் தாங்கிய தமிழர்

களே வழிபாடு நிகழ்த்தி வந்தனர். அவர்கள் அனைவரும் பார்ப்பார் எனும் பொதுப் பெயரால் குறிக்கப்பட்டனர். இவ்வாறே அந்தணர் என்னும் சொல்லும், சமயத்தொடர்பு உடைய தமிழ்ச்சொல் ஆகும். பார்ப்பார் என்பது இல்லறத்தாரைக் குறிக்கும். அந்தணர் என்பது துறவறம் மேற்கொண்ட முனிவர்களுக்கு உரியதாகும்.

ஆகவே தமிழ்நாட்டிலுள்ள ஆரியர்களைப் பார்ப்பார் என்று சொல்லுதல் பொருந்தாது. அவர்களைப் பிராமணர் என்று குறிப்பிடுவதே தகுதியுடையது; வேண்டுமானால் ஆரியப் பார்ப்பனர் என்று சொல்லலாம். அவ்வாறு அடைமொழியில்லாமல் 'பார்ப்பார்' என்று சொன்னால் அவர்கள் தமிழர்கள் ஆகிவிடுவர். அதனால் என்ன தவறென்று நீங்கள் நினைக்கலாம். தவறொன்றுமில்லை. ஆனால் பிராமணனை நாம் தமிழன் என்று ஏற்றுக்கொண்டாலும், அவன் அதை ஒத்துக்கொள்வதில்லையே! நம்மைவிட உயர்ந்தவன்-மேலானவன்-நம்மின் வேறானவன் என்றல்லவோ அவன் தன்னைக் கருதிக்கொண்டிருக்கிறான், சொல்லி வருகிறான்!

ஆப்பிரிக்காவில் குடியேறிய வெள்ளையர்கள் எப்படி அந்தநாட்டுப் பழங்குடி மக்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று, தங்கள் நிறவெறி காரணமாகக் கூறிவந்தார்களோ, அப்படியேதான் இந்த நாட்டிற்கு வந்த ஆரியர்களும்–இக்கால பிராமணர்களும் 'பூதேவர்' என்றும் 'பூசுரர்' என்றும் தங்களை உயர்வாகவே சொல்லிவந்தார்கள்; சொல்லி வருகிறார்கள். எனவே, இதை ஒருவகை நிறவெறிக்கொள்கை அதாவது (Brahman Aparthied) என்று சொல்லலாம்.

தொடக்கத்திலிருந்தே ஆரியர்கள் தங்களை மற்றவர்களிலிருந்து பிரித்துக்காட்டியே வந்துள்ளனர். மலையாளத்தில், அந்நாட்டுக் குடிமக்களான நாயர்கள் வாழும் வீடுகளுக்குக் "கரை" என்று பெயர்; ஆனால் பிராமணர்களின் இருப்பிடங்களுக்குமட்டும் 'இல்லம்' என்று பெயர். இவ்வாறே ஆரியர்கள் தங்கியிருந்த ஊர்களுக்கு, நன்மை என்று பொருள் தருகின்ற 'மங்கலம்' என்னும் சொல்லைக்கொண்ட சதுர்வேதி மங்கலம் போன்ற பெயர்களை அமைத்துக்கொண்டதோடன்றி, ஏனைய தமிழ்மக்களிடம் கலந்து பழகாமல், தனித்தே வாழ்ந்து வந்துள்ளனர்.

வீடுகட்டுதற்கு உரிய மரங்களைத் தேர்ந்தெடுப்பதுபற்றிக்கூறும் மனைநூலிலும்கூட, பிராமணர்களுக்கு உகுக்காத—உறுதியான

மரங்களும்; மற்றவர்களுக்கு எளிதில் உளுத்துப்போகக் கூடிய மற்ற மரவகைகளும். சொல்லப்படுகின்றன. அவ்வளவு ஏன்? செய்யுட்களில் சிறந்ததான—வெண்பா பிராமணர்க்கு உரியது; ஏனைய செய்யுட்கள் மற்றவர்க்கு உரியன என்று பாட்டியல் நூல்கள் கூறுகின்றனவே! இதுமட்டும் அன்று தமிழர் குழுவிலே மிகவும் சிறந்தவராக—உயர்ந்தவராகக் கருதப்பெற்ற முனிவர்களைக் குறிக்கும் 'அந்தணர்' என்ற பெயரையும் நாளடைவில் தங்களுக்கே உரிமையாக்கிக்கொண்டார்கள்.

இதைக் கேட்கும்போது, ஆரியர்கள் எப்படி இத்தகைய தமிழ்ப் பெயர்களைத் தாங்கினர் என்ற ஐயம் உங்களுக்கு எழலாம். ஆனால், இந்த ஐயம் தேவையற்றது. ஏனெனில், தொடக்க காலத்தில்—அஃதாவது கடைக்கழகக்காலம் வரையில்கூட—ஆரியர்கள் தூய தமிழ்ப் பெயர்களையே தாங்கியிருந்தனர். ஒருசிலர் சிறந்த தமிழ்ப்புலவர்களாகவும் விளங்கினர். காலப்போக்கில்தான் அவர்கள் படிப்படியாகத் தமிழில் வடமொழிச் சொற்களைப் புகுத்தினர்; தமிழரிடையே வடவரின் கதைகளைப் பரப்பினர். சமயம்பார்த்து, மிக்க திறமையோடு இவற்றை அவர்கள் செய்துவந்துள்ளனர். முதன் முதலில் அவர்கள் வடமொழிச் சொற்களைப் புகுத்தியது, முன்னமே நான் கூறியபடி, சமயத்துறையில்தான். ஆனால், ஆரியத்தால் தமிழன் கெடுகிறான்; எனவே ஆரியத்தினின்று விடுதலைபெற வேண்டும் என்றால் மதம் ஒழியவேண்டும் என்ற கொள்கையை நான் ஒருபோதும் ஒப்பமாட்டேன். ஏனென்றால், சிவநெறி, திருமால்நெறி என்ற இரண்டும் தமிழர் மதங்கள். இதைத் 'தமிழர் மதம்' என்னும் எனது நூலில் விளக்குவேன்.

சிலர் நினைக்கலாம், நான் நூல்கள் எழுதி விற்பனை செய்து அதன்வழி வரும் பணத்தைக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறேன் என்று. ஆனால் உண்மை அதுவன்று. நான் ஒரு பெரிய போராட்டத்திற்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றேன். இந்தப் போராட்டத்திற்கு இரண்டு குண்டுகள் அணியமாகி விட்டன. இன்னும் மூன்று குண்டுகள் எஞ்சியுள்ளன. அவை வெளிவந்ததும் பெரும்பாலும் 1970-இல் ஒரு போராட்டம் நடைபெறும். அந்தப் போராட்டத்திற்கு மாணவர்களும் இளைஞர்களும் அணியம் ஆகல் வேண்டும்.

இதுநிற்க. ஆரியர்கள் தமிழரை எவ்வழியில் வெல்லலாம் என்று எண்ணிப் பார்த்தார்கள். 'Vulnerable Poison' என்பார்களே அதைப்போல, சமயத்துறையில் தலையிட்டால்தான்; தமிழரை எளிதில்

வெல்லலாம் என்று கண்டுகொண்டார்கள். தமிழருக்கு இயல்பாய் அமைந்த பழங்குடிப்பேதமை, சமயப்பித்து (Religious fanaticism) கொடைமடம் (Indiscriminate munificence) ஆகிய தன்மைகளைத் தங்கள் முன்னேற்றத்திற்குக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

முதலில் அரசர்களைச் சார்ந்து, அவர்களை வயப்படுத்தினர். பின்னர் அவர்கள் உதவியால் படிப்படியாகப் பொதுமக்களை வயப்படுத்தினர். இவ்வாறாக, முதலில் சமயத்துறையில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டி, பிறகு அரசியலிலும் காலூன்றத் தொடங்கினர்.

ஆனால், இந்தச் சமயங்களில் எல்லாம் தமிழ்ப்புலவர்கள் வாளா இருந்துவிடவில்லை அவ்வப்போது கடுமையான எதிர்ப்பு தெரிவித்தே இருக்கிறார்கள். ஆரியர் வருகையால் தமிழர்க்கு நேர்ந்த தீமையைக் கண்டு அஞ்சியே திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

என்றாலும், பொதுவாகத் தமிழர்கள் ஆரியர்களைத் தங்கள் பகைவராக என்றுமே கருதியதில்லை அவர்கள் இந்த நாட்டிற்கு வந்த காலந்தொட்டு அவர்களைத் தங்கள் உடன்பிறந்தவர்களைப் போல அன்பாகவே நடத்தி வந்திருக்கின்றனர். அவர்களை அயலாராக எண்ணி வெறுக்கவோ, விலக்கவோ இல்லை ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பரந்த மனப்பான்மையுடனேயே பழகி வந்துள்ளனர். இருந்தும்கூட, பிராமணர்கள் அவர்களைத் தங்களைச் சார்ந்தோராகக் கருதாமல் ஒதுங்கியே வாழ்ந்து வந்துள்ளனர். இதனாலேயே நாம் அவர்களைத் தமிழர்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது- இன்றும்கூட. எல்லாவகையிலும் தமிழின் சிறப்பை ஒழிக்க நினைக்கும் அவர்கள் இயல்பும், புறம் நட்டு அகம் வேர்க்கும் நச்சுத் தன்மையும் அவர்களை இன்னாரென்று நமக்கு எளிதில் புலப்படுத்தி விடுகின்றன!

இஃது ஒருபுறம் இருக்க, மேனாட்டார் தமிழின் மேன்மையையும் தமிழரின் பழைய பெருமையையும் உணரமுடியாமல் இருப்பதற்கு, இன்றைய தமிழரின் தாழ்ந்த நிலையும் ஒரு காரணம் ஆகும். இவர்களைக் காணும் ஆங்கிலேயர்கள், இத்தகையவர்களின் முன்னோர்கள் எப்படிச் சிறந்த நாகரிகம் உடையவர்களாகத் திகழ்ந்திருக்கக்கூடும் என்று ஐயுறுகிறார்கள். உண்மையைச் சொல்வதானால், பல நூற்றாண்

டுகளாகத் தாழ்ந்த நிலையில் இருந்த ஆப்பிரிக்கர்கள் உயர்ந்துள்ள அளவிற்குக்கூட நம் தமிழர்கள் உயரவில்லை எனலாம். இதற்குக் காரணம் ஆரியப் பார்ப்பனர்களே யாவர். இவர்கள் தமிழர்களின் உள்ளத்திலிருந்து பகுத்தறிவு, தன்மானம், நெஞ்சுரம் ஆகிய – மாந்தன் வளர்ச்சிக்கு இன்றியமையாத மூன்று இயல்புகளையும் அறவே அகற்றி விட்டனர். இறைவனையும் விதியையும் காரணமாகக்காட்டி, தமிழர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்துவிட்டனர்.

இதனாலேயே தமிழர்களிற் சிலர் பிராமணர்களை அறவே வெறுக்க முற்பட்டு, அவர்களுடைய உணவுக்கடைகளையும் புறக்கணித்து வருகின்றனர். இங்கு வந்திருக்கும் சித்த மருத்துவர் தகடூர். செல்லையா அவர்கள், எவ்வளவுதான் பசிக்கொடுமையால் வாடினாலும், பிராமணர்களின் உணவுக்கடைக்குப் போகவே மாட்டார். அது மட்டுமன்று; பிராமணர்களுக்கு மருத்துவம் செய்யவும் மறுத்துவிடுவார். இத்தகைய நெஞ்சுரம் எல்லாத் தமிழர்களுக்கும் வேண்டும்.

சிறிது ஆழ்ந்து நோக்குவோமானால், உண்மையில் பிராமணர்கள் நம்மைவிட எந்தவகையிலும் உயர்ந்தவர் அல்லர் என அறியலாம். எடுத்துக்காட்டாக, ஒன்று சொல்கிறேன். பிராமணர்கள் தங்களை மற்றக் குலத்தாரைவிட உயர்ந்தவராகக் கருதிக்கொண்டு மற்ற இனத்தாரிடம் எதுவும் வாங்கி உண்ணமாட்டார்கள். தமிழரில் உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்ட சைவ வேளாளர்கள் பொற்கலத்தில் ஏதேனும் உணவுவகை யிட்டுக் கொடுப்பினும் வாங்க மறுத்துவிடுவர். ஆனால் அவர்களே வேளாளரினும் தாழ்ந்தவராகக் கருதப்பட்டுவந்த இடையப் பெண்கள் பழைய மட்கலத்தில் கொண்டுவந்த மோரை வாங்கி 'வானமிழ்தம்' என்று கூறி, மகிழ்ச்சியாகக் குடிக்கின்றனர். இந்த முரண்பாட்டை என்னவென்று சொல்லுவது!

இப்படியெல்லாம் இருந்தும், பிராமணர்கள் தங்களை மேற்குலத்தாரென்று சொல்லிக்கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழர்களைத் தாழ்த்தி வந்துள்ளனர்; வருகின்றனர். இதற்குக் காரணம் தமிழர்களின் ஏமாறும் தன்மையே யன்றி, வேறன்று. 'எட்டினால் முடி; எட்டாவிட்டால் அடி'–இதுதான் பிராமணர்களின் வாழ்க்கைக் குறிக்கோள்.

இங்குள்ள பிராமணர்கள் புலால் உணவுக் கடைக்குச் செல்வதில்லையென்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் வடநாட்டுப் பிராமணர்கள் புலால் உணவுக் கடைக்குச் சென்று, புலாலுணவு நீக்கி மரக்கறி உணவுமட்டும் உட்கொண்டு மீளுவர். தமிழ்நாட்டிலும்கூட, பிராமணர்கள் தங்கள் உணவுக் கடைகளில் எல்லாக் குலத்தாரையும், இனத்தாரையும் ஏற்றுக்கொள்கின்றனர், வாணிகம் என்ற முறையில். ஆனால் வீட்டில் மட்டும், எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும்–பல்கலைக் கழகக் கண்காணகராக இருந்தாலும், பேராசிரியராக இருந்தாலும், உயர்முறை மன்ற நடுவராக இருந்தாலும், ஆளுநராக இருந்தாலும், அவ்வளவு ஏன்–இந்தியக் குடியரசின் தலைவராக இருந்தாலும்கூட, ஒரு சிலரை ஏற்பதில்லை. இந்தப் பித்தலாட்டத்தை என்னவென்று சொல்வது!

இதற்கெல்லாம் காரணம் நமது பகுத்தறிவின்மையே. இவ்வாறு நாம் ஆரியருக்கு அடிமைப் பட்டிருப்பதால்தான், ஆங்கிலேயர்கள் நம்மை, உயர்ந்ததொரு நாகரிகத்துக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள்–ஆரியர் வருவதற்கு முன்னமே சிறந்த பண்பாட்டோடு விளங்கியவர்கள் என்று ஒத்துக்கொள்ளத் தயங்குகின்றார்கள்; மறுக்கின்றார்கள்.

இவ்வாறு, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே–அஃதாவது கடைக்கழகக் காலத்துக்கு முன்பே–ஆரியர்கள் தமிழர்களைத் தாழ்த்தி வந்ததுடன், தாங்கள் குலவொழுத்திற் குன்றியவர்களாகவும் இருந்ததனால்தான் திருவள்ளுவர்,

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமையான்" –எனவும்
>
> "மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
> பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" –எனவும்

கூறியுள்ளார்.

மேலும், தமிழர்களாகிய நாம் கூறும் அறம்வேறு; ஆரியர்கள் சொல்லும் தருமம்வேறு. நாம் அறம் என்று குறிப்பிடுவது நல்ல நெறிமுறைகளை. ஆனால் அவர்கள் தருமம் என்று கூறுவது குலவொழுக்கத்தை–அஃதாவது வருணாசிரம தர்மத்தை (Established Conduct). எனவே அறம் என்ற தமிழ்ச் சொல்லுக்குத் 'தருமம்' என்னும் வடசொல் நேரான மொழிபெயர்ப்பாகாது.

இது நிற்க, உலகில் உள்ள 3000 மொழிகளில் தமிழ் மிகவும் முந்தியது என்பதுமட்டும் அன்று; தலைமையானதும் ஆகும். இந்தக் கருத்து எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே புலனாயிற்று. வட மொழி—தமிழ் வரலாற்று ஆராய்ச்சிகளின் வாயிலாக, வரவர இக் கருத்துத் தெளிவுபெற்று வருகின்றதே யன்றி, மயக்கத்திற்கு இட முடையதாகவில்லை.

வடமொழியின் தலைமைப் பிடியிலிருந்து தமிழை மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள். இதற்காகத்தான் கடந்த பல ஆண்டுக ளாகப் பாடுபட்டு வருகிறேன். ஆனாலும், இவ்வகையில் நான் எதிர் பார்த்த பலன் விளையவில்லை. ஆனால் அஃது என் குற்றம் அன்று. நோய்க்கு ஏற்ற மருந்தை நான் ஆயத்தம் செய்துவிட்டேன். அதை மற்றவர்கள் உண்டு நோய் தீரப்பெறவில்லையென்றால் என் குற்றமா அது?

தமிழ் திரவிட மொழிகளுக்குத் தாய்மட்டும் அன்று; ஆரியத் திற்கு மூலமும் அதுவே. இந்தக் கருத்தை நான் நெடுநாளாகவே வற்புறுத்தி வந்திருக்கிறேன். ஆனால் அண்மையில் சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு இந்தக் கொள்கையை விளக்கும் வகையில் அமைந்ததாகத் தோன்றவில்லை. அந்தக் குறைபாட்டை நீக்கவே இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இன்று நடைபெறுவது தமிழ் வரலாற்று மாநாடு. தமிழ்க் கழக அமைப்பு மாநாடு நாளை நடைபெற இருக்கின்றது. இன்றைய கூட் டத்தில் தொல்காப்பியர் காலமும், திருவள்ளுவர் காலமும், தமிழன் பிறந்தகமும் முடிவு செய்யப்பட இருக்கின்றன.

தமிழ் வரலாறு என்று சொல்லும் பொழுது தமிழின் பழமை நம் கண்முன் நிற்கின்றது. தமிழ் மிகப் பழமையான மொழி. அதன் பழமையை நிலைநாட்டுவதற்குக் குமரிநாட்டு மொழி தமிழ் என்று சொல்வதே போதும். உலகத்து நாடுகளில் மிகப் பழமையானது குமரிநாடு. மேனாட்டு உயிர்நூல் (Biology) அறிஞர்கள் இதை ஒத்துக்கொள்கிறார்கள். குமரிநாட்டுப் பறவைகள், மரங்கள் போன்ற வற்றின் தொன்மை இக்கொள்கைக்குத் துணை செய்கிறது.

இந்தக் குமரிக்கண்டம் கடல்கோளால் அழிந்தபோது, இங்கு வாழ்ந்த தமிழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வடக்கே சென்றனர். இவ்வாறு விந்தியமலைக்கே வடக்கேசென்ற தமிழரே திராவிடர் ஆயி னர்; அவர்கள் வடமேற்கே சென்றபோது ஆரியர் ஆயினர். இதனால் தமிழ் திரவிடமாகி, ஆரியமாக வடிவெடுத்தது.

குமரிக்கண்டத்தில்தான் கடலால் கொள்ளப்பட்ட தலைக்கழகமும் இடைக் கழகமும் இருந்தன. இவற்றுள் இடைக்கழகம் அழிந்த பிறகுதான் ஆரியர் இந்தநாட்டிற்குவந்தனர். அவர்கள் வந்தபோதே, தமிழன் எளிதில் ஏமாறுபவன் என்பதைக் கண்டுகொண்டார்கள். அதனால் தாங்கள் மட்டுமன்றித் தங்கள் மரபினரும் வளமாக வாழ்வதற்கு நிலையான ஒருதிட்டம் வகுத்தார்கள்.

முன்பே நான் சொன்னபடி, தமிழ் வழிபாட்டுக்கு உதவாத மொழியென்று விலக்கியதோடு மட்டும் அல்லாமல், முதலிரண்டு கழகத்திலும் இயற்றப்பட்ட தமிழ் நூல்களை அடியோடு அழித்துவிட்டார்கள். ஏனென்றால், நிலப்பரப்பு கடலில் மூழ்கும்போது உயிர்வகைகள் அனைத்தும் அழிந்து போகலாம்; ஆனால் நூல்கள் அத்தனையும் அழிந்துபோயின என்பது முறையாகாது. கடல் கோளுக்குத் தப்பிவந்த புலவர்கள் நூல்களை யெல்லாம் எறிந்துவிட்டு வந்துவிட்டார்கள் என்று சொல்லுதல் இயலாது. ஆகவே அவை அழிக்கப்பட்டே யிருத்தல் வேண்டும். அவை நிலைத்திருந்தால் தமிழின் பெருமையை—தமிழனின் மேன்மையை வருங்கால மக்கள் அறிந்துகொள்வார்கள் என்ற தீய எண்ணத்தால் ஆரியர்களே அவற்றை அழித்துவிட்டனர்.

இந்த அழிவிலிருந்து எஞ்சி நின்றநூல் தொல்காப்பியம் ஒன்றுமே. இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் பொருள் பற்றிய பகுதியில் செய்யுள் இயற்றும் முறையும் அணிவகைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே தொல்காப்பியம் ஐந்திலக்கணம் கூறும் நூல். இந்த ஐவகை இலக்கணத்தையும் பண்டைத் தமிழர்கள் 'இயல்' என்று வழங்கினர். இயற்றமிழுடன் பண்ணும் தாளமும் சேர்ந்ததை இசைத்தமிழ் என்றனர். இசைத்தமிழுடன் நடிப்பும் கூடியதை நாடகத்தமிழ் என்று கூறினர். இவ்வாறு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் தலைக்கழகக் காலத்தில் புலவர்களால் போற்றி வளர்க்கப்பட்டன.

ஆனால், காலப்போக்கில் இவ்வளர்ச்சி வரவரக் குறைந்து கொண்டே வந்துள்ளது என்று கருத இடமுண்டு. எப்படி யென்றால், இடைக்கழகக் காலத்தில் நாடகத் தமிழ்பற்றிய ஆர்வம்

குறையப்பெற்று, இயலும் இசையுமே பேணிக் காக்கப்பட்டன என்று அறிகிறோம். மற்றும், கடைக்கழகக் காலத்திலோ, இசையின் இன்றியமையாமை மறக்கப்பெற்றதால், இயற்றமிழில் மட்டுமே நாட்டம் செலுத்தப்பட்டதை நன்கு உணர்கிறோம்·

அதுமட்டும் அன்று . புலவர்களின் எண்ணிக்கையும் வர வரக் குறைந்து வந்துள்ளது. முதற்சங்கம்-அஃதாவது தலைக் கழகம் இருந்தது பஃறுளியாற்றின் கரையில் அமைந்த தென் மதுரையில் எனலாம் பஃறுளி என்பது குமரிமலையின் அடிவாரத்தையொட்டிப் பாய்ந்த ஓர் ஆறுகும். இந்த மதுரைச்சங்கத்தில் இருந்த சிறந்த புலவர்கள் 549 பேர். இவர்கள் மிகுந்த திறமையும் தகுதியும் பெற்றவர்கள். இக்காலத்துப் புலவர்களைப் போலச் செய்யுள் எழுதுபவர்கள் அல்லர், இவர்கள்! செய்யுளால் பாடுபவர்கள்; செய்யுளால் பேசுபவர்கள்! இவர்களைத் தவிர, திறமை குன்றிய-தமிழ்ப்புலமை முற்றப்பெறுத புலவர்களும் இக்கழகத்தில் இருந்திருக்கின்றனர்.

இடைக்கழகக் காலத்தில் இத்தகைய பெரும் புலவர்களின் எண்ணிக்கை 59 ஆகக் குறைந்துவிட்டது. கடைக்கழகக் காலத்திலோ இன்னும் குறைந்து 49 ஆகிவிட்டது!

ஏனிந்த நிலை என்று எண்ணிப் பார்த்தால், தமிழகத்தின் பரப்பு வரவரச் சுருங்கி வந்ததே தகுந்த காரணம் என்பது புலப்படும். கடலில் மூழ்கிப்போன பண்டைத் தமிழகத்தின் நீளம் மட்டும் 2000 கல் தொலைவு எனலாம். இன்றுள்ள குமரிமுனைக்குத் தெற்கே இருந்த இந்நிலப்பரப்பின் பெரும் பகுதி, தலைக்கழகத்தின் இறுதியில் கடலில் மூழ்கி மறைந்தது. இதுதான் தமிழகத்தில் நடந்த பெரிய கடல்கோள்!

இந்தக் கடல்கோளுக்குத் தப்பிய பாண்டியனே கபாடபுரத்தில்-இதன் பழைய தமிழ்ப்பெயர் அலைவாய் என்பது-இடைச்சங்கத்தை நிறுவினுன். மீண்டும் நிகழ்ந்த ஒரு கடல் கோளால் இடைச்சங்கம் இருந்த நிலப்பரப்பும் அழிந்தது. ஆனுல் இந்த அழிவு முன்போன்று அவ்வளவு பெரிதன்று. இன்றுள்ள குமரி முனைக்குத்தெற்கே இருந்த குமரியாறுவரை அமைந்தநிலப்பகுதி

நீரில் மூழ்கிற்று. அதனுல்தான் அந்த ஆற்றின் பெயர், எஞ்சிய நிலப்பரப்பின் இறுதிக்குப் பெயராக வழங்கிவருகின்றது.

இவ்வாறு தமிழகத்தின் பரப்பளவு குறைந்ததால்தான் புலவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. ஓர் எடுத்துக்காட்டு சொல்கிறேன். குமரிமுதல் பனிமலைவரை, இந்தியா முழுவதும் உள்ள உறுப்பினர்களைக் கொண்ட, ஏதேனும் ஒரு துறை பற்றிய கழகம் அமைப்பதானுல், அதில் எத்தனை உறுப்பினர் இருப்பர்? தமிழகத்தில் உள்ளவர்களை மட்டும் கொண்ட கழகத்தில் எத்தனைப்பேர் இருப்பர்?

தமிழகம் என்று சொல்லும்பொழுது எனக்கு வேருெரு செய்தி நினைவுக்கு வருகிறது. பழங்காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்னும் மூன்றையும் கொண்டதே தமிழகம் எனப்பட்டது. ஆகவே, இன்றுள்ள தமிழ்நாடு தமிழகம் ஆகாது. இதனுடன் புதுவையும் சேர்ந்தாலே தமிழகம் ஆகும். ஆதலின், புதுவையைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கும் தமிழர்கள் கிளர்ச்சி செய்தல் வேண்டும்.

(தொடரும்)

மொழிப்பேரறிஞர்,

திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுதிய

வண்ணனை மொழிநூலின் வழுவியல்

பிழைதிருத்தப் பட்டியல்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	28	சக்கட்டை	(நீக்கிவிடுக)
44	1	ரணபரிபூ	பரிபூரண
63	17	மேல்	மெல
98	4	முதலை, முனிலை	முதனிலை
108	3	சிலம்பு	சிலம்பி

இந்நூல் கிடைக்குமிடம்.—

திரு. தே. மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ ஆ.)

மறைந்துவரும் தமிழ்ச்சொற்கள்-

சோம்பல் அடிமை அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்துவரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக:
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்
விழிஞரு. எழிலரசன், கப்பியாம்புலியூர், விழுப்புரம்.

அலகு–விழாவில் மக்கள் போட்டுக்கொள்ளும் நீண்ட ஊசிகள்.

அந்தி விழுதல்–ஏருழவில், நேருழவில் எஞ்சிய உழாத பகுதி.

அறக்கப் பறக்க–மிக விரைவாக.

ஆடை–சேழ்வரகை மூடிய தோல்.

உத்திக்கரை–ஒழுங்கான உயர்ந்த வாய்க்கால்.

உறை–மண்ணுல் செய்த குதிர்.

எடய–தொலைவாக; நெருக்கமில்லாமல்.

ஒபயம்–விழா செய்ய வரையறுக்கப்பட்ட முறை.

ஒரட்டுக்கை–இடது கை.

ஓரி–நீரில் விளையாடும் ஒருவகை ஆட்டம்.

கன்றுவிடுதல்–பால் கறத்தல்.

கட்ரா–உண்கலம்.

கல்துறை–இறந்தவர்க்கு இறுதிச்சடங்கு நிகழ்த்துமிடம்.

களரி–கூத்து நடக்குமிடம்.

குட்டுவெடித்தல்—உண்மை வெளியாதல்.

கையெழுத்து மறைதல்—மாலை மறைந்து இரவு தொடங்கும் நேரம்.

சந்திசிரித்தல்—ஊரின் ஏளனப் பேச்சுக்கு ஆளாதல்.

சங்காயம்—கொள்ளு, துவரை போன்ற பயறுகளை மூடியதோல்.

செல்லி—ஒரு குண்டை மற்றொரு குண்டு (தானே) மோதுதல்.

கொங்கை—கம்பை மூடிய தோல்.

சானக்கு—மண் ஏனம்.

தண்ணீர் காட்டல்—எதிரியைத் திணற அடித்தல்.

திரிமாசூழல்—பொய்ம்மை; உண்மையைத் திரித்துக்கூறல்.

தொந்தாலம்-சுட்டவசம்பு, ஊறவைத்த மஞ்சள், ஊறவைத்தபூண்டின் அடி இவற்றை நூலில் கோத்துக் குழந்தை கையில், பிறந்த ஏழாம்நாளில் கட்டுவது.

தொளும்பு—நிலக்கடலையின் தோல்.

நிலாவரை பலாவரை—இழவு காரியங்கட்கு அரிசியால் செய்யப்படும் பண்ணியம்.

(ஒரு) நிலை—மாடு ஒருதடவை போடும் சாணம்,

நிலாக்காய்தல்—நடவுக் கழனியில் நெருங்க நடாத பகுதி.

(ஒரே) நெட்டாக—இடைவிடாமல்.

நீசத்தண்ணீர்—பழையசோற்றின் நீர்.

பல்லா—மண்ணாலான சிறு ஏனம்.

பதனம்—கவனம்; காப்பு.

பாந்து—பள்ளம்.

பாடுவாசம்—நெல்லைப் பதனப்படுத்தல்.

பாடுவாசக்கழிவு—நெற்சுனைக்கழிவு. (நெல்லைப் பதனப்படுத்திப் பின் அளக்கும்போது உண்டாகும் குறைவு)

பேந்தை—ஒருவகைக் குண்டு ஆட்டம்.

பொட்டு—துவரை உடைத்த தோல்.

மசண்டல்—கலங்கிய நிலை.

மடக்கு—மண் ஏனத்தில் ஒருவகை.

முக்கல—நிறைய.

முட்டைத்தளி—கலவோட்டில் வறட்டிகளை அடுக்கிப் பருப்பு போன்றவற்றை வேகவைத்தல்.

முளி-உடைத்த தேங்காயின் ஒரு பகுதி; உறுப்பிழந்தவர்.

மொப்பு-பால்பல்லாவில் ஏற்படும் ஒருவகை நாற்றம்.

கீழ்வரும் சொற்களைத் தொகுத்தளித்தவர்
தம்பி அகத்தியன், பள்ளபாளையம் (அஞ்சல்) மங்கலம்(வழி) கோவை.

அட்டரை-நன்றாகச் சாப்பிடுவதால் வயிறு 'கும்' மென்று இருத்தல்.

கந்தாயம்-நிலவரி.

கதனை-வெடிமருந்தும், செங்கல்லும் சேர்த்துச் செடிந்து வைக்கப்படும் வெடி.

காடி-பண்டங்களுக்கு (மாடுகளுக்கு)த் தின்ன தட்டு இடுமிடம்.

கேதாரி-ஊர் சுற்றுபவன்.

கேவுதல்-முட்டையிடுமுன் கோழி எழுப்பும் ஒருவகை ஒலி.

செடிதல்-கடப்பாரை போன்ற கருவியால் இறுகக் குத்துதல்.

ச(டை)டவு-களைப்பு.

சொலையன்-செயலைத் திறமையாகச் செய்பவன்.

தொறிபிடித்தல்-ஏழ்மை நிலையடைதல்.

துலை-தண்ணீர் சேந்தப் பயன்படும் உருளையைத் தாங்கிநிற்கும் மரத் தூண்கள்

தூறுவிடல்-மட்கலங்களில் வெடிப்பு ஏற்படல்.

நாம்புதல்-உள்ளங்கையில் உள்ளபொருளை இறுக்கிப் பிடித்தல்.

பதவு-புதல் நிறைந்திருத்தல்; திறமையற்றவன்.

பாந்தக்கம்-அன்பு.

பொங்கு-கோழி இறகு.

பொங்கென-இலேசாக, பளுவின்றி.

பெணுத்தல்-தொடர்ந்து பேசிச் சலிக்கச் செய்தல்.

முடை,மொடை-தயக்கம்; முடியாதநிலை.

மெட்டுதல்-அடக்குதல், மிரட்டுதல் 'மெட்டிவை' என்று கூறுவர்.

வசி,வட்டல்-உண்கலம்.

விண்ணுளம்-வாயடித்தல், வாயாடிக்கு ஒன்று தெரியாதபோது 'விண்ணுளம் பேசுகிறாயே' என்பர்.

வாது-கிளை.

கீழ்க்காணும் சொற்களைத் தொகுத்துத் விடுத்தவர்:
கோ. சண்முகானந்தம், கோட்டேரி, திருமுதுகுன்றம்வட்டம்.

காரை-கழுத்தை ஒட்டி அணியும் பொன்நகை.
கீணுதல்-தோல் நீக்குதல்.
குறகூடு-ஈச்சங் கசங்கினால் பின்னப்பட்ட தொம்பை,
குராய்-பெண் ஆட்டுக்குட்டி.
சணப்பன்-வீண்பேச்சு பேசுபவன்.
சலவன்-ஆண் பன்றிக்குட்டி.
வீரல்-சிறுபிளவு, வெடிப்பு.

கீழ்க்காணும் சொற்களைத் தொகுத்து விடுத்தவர்.
தலைமையாசிரியர், ஊ. ஒ. பள்ளி, பொம்மம்பாளையம், குப்பனூர்(அஞ்)

மாட்டி-தொலைத்து, சிக்கி, பட்டு.
சுங்காணி-பெரிய துளை.
செடிதல்-கல், மண்போட்டு நிரப்பி அடித்தல்.
வீக்கு-செம்மையாக அடி.
மெட்டுதல்-அழுத்துதல்.
கொனவு-நுனி அல்லது முனை.
செகுண்டு-நுனி உடைப்பு.
பம்பல்-நெருக்கம், பருவக்காலம்.
ஒசரம்-ஆக(அதற்காக)
கொங்காயன்-இயல்பாகப் பேதைமை யுடையவன்.
சவக்கு-நார்ப்பொருள் தின்னும்போது ஏற்படும் ஒலி.
சொளமாடுதல்-சுளையாடுதல்-சுற்றித்திரிதல்
கொழித்தல்-நொய்மண்ணைத் திரட்டுதல்.
மூலி-கிழாருது
சாடை-நீர்பாய்ச்சிய நன்செய்நிலம்.
குப்பு-குவிப்பு-குவித்தல்.
மூரம்பு கொரை-சிறுகற்கள் நிறைந்த பயிரிடப்படாத நிலம்.
எக்குதல்-வயிற்றை உள்ளிழுத்தல், பீச்சுதல், பிலிற்றுதல்.
சிலாம்பு-சிலாக்கு-சாய்-செறும்பு-மரத்தின் சிறுபிளவுக்குச்சி.

தென்மொழிக்கு நன்கொடை.

17—6—68 முதல் 6—8—68 முடிய, தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்களுக்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

		உரு. காசு.
1.	ப. சாம்பசிவம் C/o 99. A. P. O.	2 — 00
2.	இரா. ஆறுமுகம்	2 — 00
3.	து. செகந்நாதன்	2 — 00
4,	இரா. முத்துராமன்	2 — 00
5.	செ. அண்ணாமலை	2 — 00
6.	வ. பார்த்தசாரதி	2 — 00
7.	து. சம்பத்குமார், ஈரோடு.	5 — 00
8,	வீ. சீதாராமன், நெமலி (தெ.ஆ).	4 — 50
9,	தென்மொழி அன்பர் இயக்கம், திருச்சிராப்பள்ளி.	10 — 00
10.	பெங்களூர் அன்பர் சூன் மாத அன்பளிப்பு	10 — 00
11.	மு. வ. பரமசிவம், நடுப்பட்டி.	2 — 00
12.	பெங்களூர் அன்பர் சூலை மாத அன்பளிப்பு	15 — 00
13.	கோ. சுப்பிரமணியம், கிர்க்கி, பூனா.	8 — 25
14.	நி. அ. மகாலிங்கம், 10–7–68 அன்று நடந்த அவரது திருமண நினைவாக விடுத்த அன்பளிப்பு	101 — 00
15.	ந. அரணமுறுவல், நாயனூர்பாளையம்.	2 — 00
16.	ம. செயசீலன், பெரியவர்சீலி.	2 — 00
17.	Lac. அண்ணாமலை, C/o 99. A. P. O.	12 — 00
18.	சி. கிருட்டிணசாமி, நீடாமங்கலம்.	1 — 00
19.	இரா. கந்தநாதன், ஊத்துக்குளி.	1 — 00
20.	தங்கராசன், பாலச்சேரிக்காடு.	5 — 00
21.	பெங்களூர் அன்பர் சூலை மாத அன்பளிப்பு(2–ம்முறை)	5 — 00
22.	க. சின்னசாமி, மதுரை–6.	26 — 00
23.	ச. சண்முகம், பேட்டைவாய்த்தலை.	1 — 00
24,	பி. தங்கவேலு. கே. ஆர். மொகல்லா, மைசூர்,	2 — 25
25.	வே. காந்தி, திண்டுக்கல்.	3 — 50
26,	தென்மொழி அன்பர் இயக்கம், திருச்சிராப்பள்ளி.	10 — 00
27.	CPL. Rex, C/o 56. A·P.O.	0 — 75
28.	Cpl. பொன், தங்கவேலன், பம்பாய்–5.	0 — 75
29.	பெங்களூர் அன்பர் ஆகஃச்டு மாத அன்பளிப்பு	10 — 00
30.	CPL. காதர், நாகபுரி–5.	2 — 00
31.	ச. சண்முகக்கனி, திருச்சிராப்பள்ளி–8.	10 — 00
32.	எ. நீலகண்டன், ஆத்தூர (செங்கற்பட்டு மாவட்டம்)	1 — 50
33.	ஆ. சண்முகம், ஈரோடு.	5 — 00
34.	நா. இளமாறன், பெரும்பகல்லா.	1 — 25
35.	பார்த்தசாரதி நண்பர்கள், பரேலி (உ. பி.)	8 — 00

அமைச்சர், தென்மொழி.

என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்!

பெருஞ்சித்திரன்.

-2-

புறத்தே பார்க்கின்ற காட்சி, கேட்கின்ற ஒலி, ஊறுணர்வால் அறியப்பெறுகின்ற பருப்பொருள்கள்—என்னும் இவற்றைப்போலவே என் அகத்தே ஒரு காட்சியும், ஒலியும், நுண்பொருள்களும் எப்பருவத்தில் எனக்குவிளங்கத்தோன்றியனவோ, அப்பருவத்திலிருந்து என்னால் அமைதியாக ஒரு நொடிப்பொழுதேனும் இருக்க முடிந்ததில்லை. கூடியவரை அப்பருவத்தை என்னால் கற்பனை செய்தும் பார்க்க முடிவதில்லை. ஏணைப் பிள்ளையாக நான் கால் கைகளை மடக்கிக்கொண்டு கிடந்த நிலையினையும், ஏணையின் முன்பின் அசைவுகளையும், சில நேரங்களில் அவ்வேணையில் அசைவற்றுக்கிடந்த நிலையினையும், அது மேலும் கீழும் ஆடுகின்ற பொழுது சிலுசிலுவென்று மாறி மாறி என் முகத்தில் வீசிய காற்றினையும், படபடக்கும ஏணைச் சேலையினையும், அது முன்பின் அசைவதால் கட்டப்பெற்ற கயிறு விட்டத்தில் மாறி மாறிக் கிறீச்சிட்ட ஒலியினையும், ஒருமுறை ஏணைக்கயிறு அறுந்து நான் ஓர் ஐந்தாறடித் தொலைவில் 'பொத்' தென்று போய் விழுந்ததையும இக்கால் என்னால் நேற்று நடந்ததுபோல் உணர முடிகின்றது. எந்தெந்தக்காட்சிகள் என்மனத்தை அன்று கவர்ந்தனவோ, எந்தெந்தக் காட்சிகளை நான் அன்று முழு விருப்பத்தோடும் முழுக் கவனத்தோடும் பார்த்திருந்தேனோ, அந்தக் காட்சிகள் எல்லாமும் என் அடிமனத்தே அழகொழுக எழுதப்பெற்றுக் கிடக்கின்றன. என அன்னையின் இடுப்புப் பிள்ளையாக வீழ்ந்த நிலை, இறக்கிவிட்டபின் ஓடிப் பறந்த நிலை எல்லாமும் நேற்று நடந்தனபோல் என் நினைவில் பதிந்துள்ளன.

ஆனாலும் என் உள்ளம் எப்பொழுது விழித்துக் கொண்டது என்பதை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால் என் நினைவுக் கெட்டிய அன்றிலிருந்து இன்றுவரை எனக்கு இரண்டு பார்வை;! இரண்டு கேள்வி! இரண்டு பேச்சு! எவருமே என் அருகில் இல்லாதபடி நான் தனித்திருக்கின்ற நேரங்களிலெல்லாம் என்னுடன் பேசியும், அளவளாவியும் கிடப்பது என் உள்ளம்! அதன் பேச்சு என்றுமே ஓய்ந்ததில்லை. சில நேரங்களில் அஃது எனக்குள்ளேயே பேசும்! எனக்குள்ளே பேசுகின்ற பொழுதெல்லாம் நான் வேறாக இருந்து இயங்குவது போல எனக்குத் தோன்றும். என் வாயைக் கொண்டே

அது பேசத் தொடங்குகின்ற பொழுதெல்லாம் 'நான்' எங்கோ மறைந்து விட்டது போன்ற ஓர் உணர்விருக்கும், ஏதாவது எழுதும் பொழுதுகூட இவ்வேற்றுமையை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. சில நேரங்களில் என் தூவல் என் கையசைவுகளுக்கு இயைந்து நடப்பதாக என்னால் அறிய முடியவில்லை. ஏதோ ஒரு மந்திர அசைவில் கட்டுண்டதுபோல் அத்தூவல் ஆட்டமிட்டுக் கொண்டு நடப்பதை 'என்' அறிவு கண்டு கண்டு வியந்துள்ளது. என் புறக்கண் வெளியே வந்து தனித்து நின்று கொண்டு அக் காட்சியைச் சுவைக்கின்றது போன்ற உணர்வு அந்நேரத்தில் எனக்கிருக்கும். பெரும்பாலும் அக்கால் எழுதுவனவற்றில் மிகுதியும் அடித்தல் திருத்தல்கள் இரா.

இத்தகைய உணர்வால் நான் பெற்ற இன்பம் அளவற்றதாக இருந்தது என்றாலும், துன்பமும் அளவற்றதாக இருந்தது. என்னை நான் என்னிலிருந்து கொண்டே பார்த்ததுபோல், என்னைவிட்டு வெளியே வந்தும் பார்க்க முடிந்தது. இதுபோலவே பிறரை நான் வெளியே இருந்து பார்த்தது போலவே அவர்களுக்கு உள்ளே சென்றும் பார்க்க முடிந்தது. இக்காட்சிகள் எனக்கு மிகுதியான துன்பத்தையே கொடுத்தன.

தூய்மையாகவும் பளபளப்பாகவும் விளங்கிய சிலர் முகங்கள் எனக்கு மகிழ்வைக் கொடுக்கின்ற அதே நேரத்தில் அவர் எண்ணங்கள் எனக்கு அருவருப்பை ஊட்டின. மல்லிகைக் கொடியின் இலைகள் போலும், மாவிலைகளின் பசுமை போலுமே எட்டி இலைகளின் பசுமை இருக்கின்றது. இருப்பினும் அகத்தே எத்துணை வேறுபாடு! எடுப்பார் கைப்பிள்ளையாக நான் இருந்திருந்த பொழுதே சிலர் முகம் சிரித்துக் கொண்டிருந்தாலும் எனக்கு முள்முகம்போல் காட்சியளிக்கும். சிலர் முகம் ஒளியற்று, சோர்வுடனும், அழுக்குடனும் காணப்பட்டாலும் எனக்கு மிகவும் விருப்பமாகத் தோன்றும். எனவே அத்தகையார் எவரைப் பார்க்கினும் அவரொடு பழகவும், அவர் பேச்சைத்தொடர்ந்து கேட்கவும், அவருடன் அமரவும், உண்ணவும், உடலோடு உடல் ஒட்டிப் படுத்துக்கொள்ளவும் நான் துடிதுடித்த காட்சி! அப்பப்பா! நான் அவர்களுக்காக எவ்வளவு ஏங்கி இருக்கின்றேன் என்று இன்றைக்கும் எண்ணிக் கிளுகிளுப்புறுகின்றது என் உள்ளம்!

குழந்தைகளில் சில சிலரிடம் பார்த்தவுடனேயே ஒட்டி உறவாடு வதையும், சிலர் எவ்வளவு பழகினாலும் அவர் கிட்டவும் வரத் தயங்கு வதையும் நாம் பார்த்திருக்கின்றோம். இல்லையா? அக்குழந்தைகள் நெருங்க அஞ்சுபவர்களை 'மிக நல்லவர்கள்' என்று நாம் அவற்றிற் குப் பரிந்துரைக்கின்றோம். இருப்பினும் அவை அவர்களின் முகத்தைப் பார்க்கவும் மறுத்து விடுவதும் நமக்கு வியப்பாக விருக்கும். சந்தைக் கடை இரைச்சலில் இசையைச் சுவைப்பதுபோல, இத்தகைய மெல்லிய உணர்வுக் காட்சிகள் நம் ஆரவாரப் பேச்சுக்கிடையிலும் செயல்களுக் கிடையிலும் சில நொடிகள்கூட நம் கவனத்தை ஈர்ப்பதில்லை. முக மழிப்புத் தகட்டால் தேக்கு மரத்தைத் துண்டுபோடும் முயற்சிபோல, அக் குழந்தையின் விருப்பு வெறுப்பு நிகழ்ச்சிகள் நம் எண்ணங்களை வெற்றி கொள்வதில்லை.

ஆனால் அக்குழந்தையின் போக்கில் ஒரு பொருள் இருக்கத்தான் செய்கிறது. நம்மைவிட அக்குழந்தையின் மெல்லிய மனவுணர்வு களுக்கு, அதனொடு பழக முற்படுபவர்களின் உளத்தன்மைகள் மிக எளிதாகப் புலப்பட்டு விடுகின்றன வென்பதே அதற்குள்ள பொருள். புறத்தோற்றங்கள் ஒருவாறு இந்நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருக் கின்றன என்பதும் ஓரளவு உண்மையே! ஆனால் அப்படிப்பட்ட குழந் தைகள் வளர்க்கப்பெறுகின்ற சூழ்நிலைகள் அவ்வாறு அவற்றின் மன வுணர்வுகளை மறையச் செய்வனவாகவும் இருக்கலாம்.

எனவே இத்தகைய உணர்வு இவ்வுலகத்தை இரண்டு பிரிவாக எனக்குக் காட்டியது. ஒரு பிரிவு நான் வாழ்ந்து கொண்டிருக்கும் உல கம். ஒன்று நான் வாழவேண்டிய உலகம். இவ்வுள்ளக்கீற்று என் பெற்றோரைக்கூட இரண்டு தோற்றங்களாக எனக்குக் காட்டியது. ஒரு தோற்றத்தில் எனக்கிருக்கின்ற பெற்றோரைக்கண்டு வருந்தி னேன். ஒரு தோற்றத்தில் எனக்கு இருக்கவேண்டிய பெற்றோரைக் கண்டு ஏங்கினேன். இந்தக் காட்சிப் பழக்கம் இங்கு அங்கு என்றில் லாமல் எல்லாவற்றிலும், எல்லா விடத்திலும், எல்லாக் காலத்திலும் படரத் தொடங்கியது. காலை நேரத்தை, இப்பொழுது மாலையாக இருந் தால் நான் பள்ளிக்கூடம் போகவேண்டியிராதே, அமைதியாகப் படுத்துப் பாட்டு பாடிக்கொண்டிருக்கலாமே என்று எண்ணி ஏங்கு வேன். பள்ளி நாட்கள் விடுமுறை நாட்களாக இருந்தால், பச்சைப் பசும்புல் வெளிகளிலும், அணைக்கட்டில் நழுவிச்செல்லும் வழுக்கல் நீரிலும் பொழுதைப் போக்கலாமே என்று கருதி வாடுவேன். இதனால்

என் விழிகள் நான்காயின; காதுகள் நான்காயின; வாயும் இரண்டானது. ஒரு வாயால் என் எதிரில் உள்ளவரிடம் உரையாடுவேன்; ஒரு வாய் எதிரில் இருக்கவேண்டியவர்களை எதிர்பார்த்து ஊமையாய்க் கிடக்கும். இவ்வாறு இருக்கின்றவற்றைப் பற்றியும் இருக்கவேண்டுவன பற்றியும் ஆழமாக-மிகமிக ஆழமாக எண்ணி எண்ணி, முன்னவைக்கு வருந்தியும், பின்னவைக்கு ஏங்கியுமே வரலானேன். இந்நிலை முதிர முதிர என் வருத்தமும் ஏக்கமும் முதிரலாயின. நாளாக ஆக, இருக்கவேண்டிய உலகமாக நான் கண்ட உலகை என் கொள்கை (இலட்சிய) உலகமாகவும், இருக்கின்ற உலகைத் திருத்தப்படவேண்டிய உலகமாகவும் நான் கொண்டேன். அந்தக் கொள்கைஉலகை நோக்கி நடந்தேன்; நடக்கவைத்தேன்; நடக்காதவர்களுக்காக நான் வருந்தினேன்; ஏங்கினேன்; அழுதேன்; துடித்தேன். பயனில்லாவிடத்துத் தனி நடையிட்டேன்.

இவ் வுணர்வுநிலை எந்நாளிலிருந்து, எந்த அகவையிலிருந்து தோன்றியதென்றே எனக்குப் புலப்படவில்லை. பெரும்பாலும் என் குழந்தைப் பருவம்கூட எனக்குத் துல்லியமாக விளங்குகின்றது. அப்படியிருக்க, இவ்வுணர்வுத் தோற்றம் மட்டும் விளங்கவே இல்லை. இந்நிலை இல்லாதிருந்த ஒருபொழுது இருந்ததாகவே எனக்குப் படவில்லை. நான் குழந்தையாக இருந்ததற்கு முன்... தாய் வயிற்றில் கிடந்தேனே... அதற்கு முன்கூட, அப்படி ஓர் 'இல்லாமை' இருந்ததாக எனக்குப் படவில்லை. நான் இல்லாமலிருந்து பின் பிறந்து வளர்ந்ததாகவே எனக்குப் படவில்லை. நான் இருந்துகொண்டு இருப்பதாகவே எனக்குப் படுகின்றது. நான் இருந்தேன்; இருக்கின்றேன்; இருப்பேன் என்ற உணர்வே என் உடலெங்கும், உடலணுக்கள் எங்கும் இருக்கின்றது. மற்றவர்களைப்பற்றி எனக்குத் தெரியவில்லை! ஒருவேளை அவர்களுக்கு அத்தகையதொரு காட்சி உணரப்படுகின்றதோ என்னவோ? என்னைப் பொறுத்தமட்டில் 'என்னை' நான் உணரமுடிகின்றது. 'என்' உடலை உணரமுடிகின்றது. 'என்னை'யும் 'என்' உடலையும் வேறுவேறாகப் பிரித்து உணரமுடிகின்றது. அதனால் 'என்னை' இவ்வுடலுக்குத் தொடர்பில்லாதவனாகக் கருதுகின்றேன்.

இவ்வுடல் சிறிய உடலாக இருந்தது எனக்குத் தெரியும். இதன் கைகளும் கால்களும் மிகவும் சிறியனவாக, மிகமிகச் சிறியனவாக இருந்தபொழுதும் நான் இதனுள் அளாவி இருந்தது எனக்கு நன்றாய் விளங்குகின்றது. 'நான்' வளரவில்லை. 'என் உடல்' வளர்ந்துவிட்டது.

கைகள் பருத்துவிட்டன்; கால்கள் பருத்துவிட்டன; வயிறு, மார்பு, உயரம், பருமன் எல்லாமே முன்பிருந்த அளவுகளில் மாறி வருகின்றன என்பதை நான் உணர்கிறேன். ஆனால் 'நான்' மட்டும் வளராமல்—வளர்ச்சி வேண்டாதவனாக—வளரத் தேவையற்றவனாக இருப்பதாக எனக்குப் படுகின்றது. நான் அன்றிருந்தபடியே இருப்பதாக உணர்கின்றேன். (என் அறிவு சொல்லி என் கைகள் இவற்றை எழுதவில்லை. 'நானே' எழுதுகின்றேன். என் அறிவு வினையாற்றும் பொழுதுதான், நான் இருக்கின்ற உலகம் புலப்படுகின்றது. இப்பொழுது நான் இருக்க வேண்டிய உலகத்தில் இருந்துகொண்டு இதனை எழுதுவதாக உணர்கின்றேன். ஆனால் இதைப் படித்துவிட்டு 'இக்கருத்துகள் அறிவுக்குத் தொடர்பற்றனவாக' இருப்பதாக எவரும் கூறிவிட வேண்டா. அறிவு உலகம் வேறு; உணர்வு உலகம் வேறு. அறிவுலகம் பொறிகளால் உணரப்படுகின்ற உலகம்; உணர்வுலகம் உளத்தினால் உணரப்படுகின்ற உலகம்) ஆகவே 'நான்' நானாகவே இருக்கிறதாக எனக்குப் படுகின்றது. என் உள்ளம் நான் உணர்ந்த அன்றும் விழித்திருந்தது; இன்றும் விழித்திருக்கின்றது. என் தாயின் மடியில் படுத்துக்கொண்டு நான் பாலருந்திய பொழுதும் 'நான்' விழித்திருந்தேன்; வளர்ந்திருந்தேன்; முதிர்ந்திருந்தேன்; இப்பொழுதும் அவ்வாறே இருக்கின்றேன். என் அறிவுமட்டும் சிறிது விளக்கமுற்றுள்ளதாக எனக்குப் படுகின்றது; உணர்வு மட்டும் அதுதான்! அதுவேதான்! உடலோ பல மாற்றங்களுக்கு உட்பட்டுவிட்டது! உள்ளம் மட்டும் எவ்வகைச் சூழலிலும், எந்தக் காலத்தும் மாற்றமுறாமல் அன்றிருந்தபடியே இன்றும் இருக்கின்றதை நான் உணர்கின்றேன்! —தொடரும்.

தென்மொழி-கட்டூர்-1.

[உலகத் தமிழ்க்கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

கண்ணுக்குப் புலனுகாத ஒளி.

-த. சலாவுத்தீன், அறி. இ., ஆ. ப-

காலையில் கதிரவன் பொன்வண்ணக் சதிர்களை வீசிக்கொண்டு கிளம்பும்போது இயற்கை அனைத்திலும் அவனுடைய கதிர்கள் பட்டு எதிரொளி எழுப்ப, கண்ணுக்கினிய காட்சி தருகின்றுன். இக்காட்சியினைக்கண்ட புலவர்கள் பாக்கள் பல பாத்து நம்மை மகிழ்வித்துள்ளார்கள். இக் கதிரவனின் ஒளியால்தான் நாம் நம்மைச் சுற்றியுள்ள பொருள்களனைத்தையும் கண்டு இன்புற முடிகின்றது. இவ்வொளியைத்தான் கண்ணுக்குப் புலனுகும் ஒளி (Visible light) என்கிறோம்.

இன்னொரு வகையான ஒளிகூட உண்டு. அது கண்ணுக்குப் புலனுகாத ஒளி!

இவ்வொளியைப் பற்றி அறிந்து கொள்ளும் முன்னர், கண்ணுக்குப் புலனுகும் ஒளியைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்ளுவோம்.

எல்லாவகையான ஒளியும் ஒருவகையான மின்காந்தக்கதிர்வீச்சே (Electro magnetic rediation) ஆகும். 'மின்காந்த' என்ற சொல்லைப் பார்க்கின், ஒளிக்கு மின்சாரத்தின் பண்புகளும் காந்தப் பண்புகளும் உண்டு எனறு தெரிந்து கொள்ளலாம், இவ்விரு பண்புகளைக் கொண்ட 'போடான்கள்' (Photons) என்ற சிறிய துகள்களின்மூலம் ஒளிவருகின்றது என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். கதிர்கள் மூலமாக வருவதால்தான் 'கதிர்வீசல்' என்று கூறுகிறோம்.

ஒளிக்கதிர்கள் அலைகளாகச் செல்லுகின்றன. ஒளி அலையின் உயர்ந்த புள்ளியை 'மேடு' (Crest) என்கிறோம். இரண்டு மேடுகளுக்கிடையேயுள்ள தொலைவை 'அலைநீளம்' என்கிறோம. ஒரு குறிப்பிட்ட 'புள்ளியை ஒரு விநாடியில் கடக்கும் அலைகளின் எண்ணிக்கையை அதிர்வு' என்று கூறுகிகிறும்.

கண்ணுக்குப் புலனுகும் ஒளிக்கதிர்களும், புலனுகாத ஒளிக்கதிர்களும் ஒரு விநாடிக்கு 186,000 கற்கள் விரைவில் செல்லுகின்றன. ஒளியின வேகத்தைக் கொண்டு விண்வெளியில் உள்ள பொருட்களின் தொலைவைக் கணக்கிடுகின்றுர்கள், எடுத்துக்காட்டாக, ஒரு விண்மீனை ஐந்து ஒளி ஆண்டுகள் (Five light years) தொலைவில் இருக்கின்றது என்று சொன்னுல், அந்த விண்மீனிலிருந்து வரும் ஒளிக்கதிர்

நம் கண்ணுக்குப் புலனாக ஐந்து ஆண்டுகள் ஆகின்றன என்பது பொருளாகும். ஓராண்டில் 31.5 நூறாயிரம் விநாடிகள் இருக்கின்றன. இதை ஐந்தால் பெருக்கி, பிறகு அதை 186,000 என்னும் எண் கொண்டு பெருக்கினால் முன்பு சொன்ன விண்மீனின் தூரம் தெரியும்.

நாம் கண்ணால் பார்க்கும் ஒளி-வெண்மை ஒளி அல்லது வண்ண மில்லாத ஒளி-உண்மையாகப் பல வண்ணங்களை உட்கொண்டதாகும். இதை முதன் முதலில் ஐசக் நியூட்டன் என்பவர் கண்டுபிடித்தார். வெண்மை ஒளி ஒரு கூட்டுக்கதிராகும் என்றார். வானவில் என்பது கதிரவன் ஒளி வண்ணங்கள் சிதறி தனித்தனியே தோன்றுவதுதான். அவையாவன: ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், கிச்சிலி சிவப்பு. அவ்வவ்வற்றின் அலை நீளங்களின்படி இவ்வண்ணங்கள் இவ் வரிசை யிலேயே தோன்றும். ஊதா வண்ணம் மிகக் குறைந்த அலை நீளத்தைக்கொண்டது; 0.0004 ஆயிரக்கீழ்க்கோல். சிவப்பு மிகுதியான அலை நீளத்தைக் கொண்டது; 0 0008 ஆயிரம் கீழ்க்கோல். இவ்வண்ணங்களின் தோற்றத்தை 'வண்ணநிரல்' (Spectrum) என்கிறோம்.

மேற்சொன்ன வண்ண நிரலைச் செயற்கையாகவும் நாம் உண்டாக்கலாம். ஒரு மிகக்குறுகிய தொளையின் வழியே ஒளியைச்செலுத்தி ஒரு முப்பட்டகத்தின் (Prism) மீது விழும்படி செய்தால் ஏழு வண்ணம் கொண்ட வண்ணநிரல் கிடைக்கின்றது. புலனாகும்வண்ண நிரல் போலவே, புலனாகாதவண்ணநிரலும் உண்டு. மின்காந்தவண்ண நிரலின் (Electro magnetic spectrum) மையத்துக்கருகே புல னாகும் ஒளிக்கதிர்கள்உள்ளன. நம் கண்ணுக்குப் புலனாகாத ஒளி யின் வண்ணநிரலைப்பற்றித் தெரிந்து கொள்வோம்.

1. மின் காந்த அமைப்பு (Electro magnetic system)

எல்லா ஒளிக்கதிர்களும் ஒருவகையான மின் காந்தக் கதிர்வீச்சே என்று முன்பே தெரிந்து கொண்டோம். இவ்வொளிக் கதிர்களைக் குறைந்த அலை நீளமுள்ள கதிர்களிலிருந்து படிப்படியாக மிகுந்த அலை நீளமுள்ள கதிர்கள்வரை, வரிசையாகக் கீழ்க்காணுவதுபோல அமைக்கலாம்.

'காசுமிக்' கதிர்கள் (Cosmic rays)
'காமா' கதிர்கள் (Gamma rays)

புதிர்க் கதிர்கள் (X-rays)
செந்நில மேற்கதிர்கள் (Ultraviolet rays)
புலனுகும் ஒளிக்கதிர்கள் (Visible rays)
சிவப்புக் கீழ்க்கதிர்கள் (Infra red rays)
தொலைக்காட்சி, இராடார் கதிர்கள் (Television and [Radar rays
குட்டை வானொலி அலைகள் (Short radio waves)
திட்டமான ஒலிபரப்பு அலைகள் (Standard radio broadcast waves)
நீள வானொலி அலைகள் (Long radio waves)
நீள மின்னலைகள் (Long electric waves)

மிகவும் நீளமான ஒளி அலைகளின் நீளம் 160 கற்கள்கூட இருக்கும். மிகக் குறைவான அலைநீளமுள்ள 'காசுமிக்' கதிர்களின் நீளம் 0.000,000,000,000,05 விரற்கடை. வெவ்வேறு வகையான கதிர்களின் அதிர்வு எண்ணும் வெவ்வேருக இருக்கும். மிகுந்த அலை நீளமுள்ள அலைகளின் அதிர்வு எண்ணும். ஆற்றலும் குறைவாக இருக்கும். குறைந்த அலை நீளமுள்ள அலைகளின அதிர்வு எண்ணும், ஆற்றலும் மிகுதியாக இருக்கும். ஒளி அலைகளின் அலைநீளமும் அதிர்வு எண்ணும் மாறுபட்டாலும் அவற்றின் விரைவு, விநாடிக்கு 186,000 கற்கள்தாம். இவ்வாறு இருப்பதால் ஓர் ஒளிக்கதிரின் அலைநீளம் தெரிந்தால் அதிர்வு எண்ணையும், அதிர்வு எண் தெரிந்தால் அலை நீளத்தையும் கண்டறியலாம்,

'புலனுகாத ஒளிக்கதிர்கள்' கண்ணுக்குத் தெரியவில்லையே, அவற்றை எவ்வாறு கண்டுபிடித்தார்கள் என்ற வினு எழும். மாந்தனுக்கு இக்கதிர்களைத் தெரியாது போனுலும், அவன் அதைப் பன்னெடுங்காலமாகப் பயன்படுத்தி வருகின்றுன்.

கதிரவன் நமக்கு வெம்மையைத் தருகிறுன், கதிரவன் ஒளி வெம்மையுடையது என்று நாம் நினைககின்றேம். புலனுகும் ஒளிக்கதிர்கள் வெம்மையைக் கொடுப்பதில்லை. ஆனுல் சிவப்புக் கீழ்க்கதிர்கள்தாம் வெப்பத்தைக் கொடுக்கின்றன. புலனுகும் ஒளியின் வண்ண நிரலில் உள்ள சிவப்புக் கதிருக்குக்கீழ், சிவப்புக் கீழ்க்கதிர்கள் (Infra red rays) இருக்கின்றன. சிவப்புக் கீழ்க்கதிர்கள்தாம் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட புலனுகாத ஒளிக்கதிர்களாகும். வயவர். வில்லியம் எர்சல் (Sir William Herschel) என்ற ஆங்கிலேய வான நூல் அறிஞர் 1800-ஆம் ஆண்டில் வண்ண நிரலைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்து கொண்டு வந்தார்.

ஒரு முப்பட்டகத்தின் வழியே ஒளியைச் செலுத்தி உண்டாக்கிய வண்ண நிரலின் செந்நீல வண்ணத்திற்கு நேராக வெப்பமானி ஒன்றை வைத்தார் இதேபோல் வெப்பமானியைச் சிவப்பு வ்ண்ணம் வரை ஒவ்வொரு வண்ணமாகத் தள்ளிக்கொண்டு சென்றார். சிவப்பு வண்ணம் உண்டுபண்ணிய வெப்பத்தை அளந்த பிறகு, வண்ண நிரலுக்கு அப்பால் வெப்பமானியைக் கொண்டு சென்றார். முன்பைவிட இப்போது இதள் (பாதரசம்) மிகுந்த உயரம் எழும்பிற்று. இது கண்ணுக்குப் புலனாகாத சில கதிர்கள் வெப்பத்தைத் தருகின்றன என்பதைக் காட்டிற்று. இந்த ஆய்வு வில்லியம் எர்சலைத் தூண்டிவிட அவர் இன்னும் பல ஆராய்ச்சிகள் செய்தார். இதன் பயனால் முழு மின்காந்த வண்ண நிரலும் கிடைத்தது

2. சிவப்புக் கீழ்க்கதிர்கள் (Infra red rays)

சிவப்புக்கீழ்க்கதிர்கள் தம்மிடம் வெப்பத்தைக்கொண்டவை வையல்ல ஏதாவது ஒரு பொருளைத் தாக்கிய பிறகுதான் அவை வெப்பத்தை உண்டாக்குகின்றன. உண்டாகும் வெப்பத்தின் அளவு பொருளின் வேதியல் பண்புகளைப் பொறுத்ததாகும். பொருளுக்குப் பொருள் வெப்பத்தின் அளவு மாறுபடும் பண்பு சிவப்புக் கீழ்க்கதிர்களுக்கு இருப்பதால், இக் கதிர்கள் மாந்தனுக்குப் பலவகையில் பயன்படுகின்றன.

சிவப்புக் கீழ்க் கதிர்களைப் பயன்படுத்திப் புகைப்படங்கள் எடுக்கலாம். இதற்கு ஒளி தேவையில்லை. இரவு நேரத்திலும் மூடு பனியிலும் நல்ல தெளிவான புகைப்படங்களை எடுக்க முடியும். இந்தப் புகைப்படப் பெட்டியில் பயன்படுத்தப்படும் புகைப்படச் சுருள், சிவப்புக் கீழ்க்கதிர் பொருள்கள்மீதுபட்டு எதிரொளி வீசுவதால் தோன்றும் வெப்பக்கதிர்களுக்கு மட்டும் உணர்வுடையதாக (Sensitive) இருக்கும்.

இரண்டாயிர உலகப் போரின்போது வானவூர்தியினின்று இரவு நேரத்திலும், மூடுபனியிலும் எதிரிகளின் இருப்பிடங்களைப் புகைப்படம் எடுப்பதற்காகச் சிவப்புக் கீழ்க்கதிர்ப் புகைப்படப் பெட்டி பயன்படுத்தப் பட்டது. பொதுவகைப் புகைப்படப் பெட்டியால் எடுக்க முடியாத படங்களை எடுக்கவும், மறைந்துள்ள

பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் இப்புகைப்படப் பெட்டி பயன்படுகின்றது

சிவப்புக்கீழ்க் கதிர்களைக்கொண்டு செய்யப்பட்ட மற்றொரு கருவி 'புலனாகு ஒளிக்கதிர் மாற்றி' (Snooper scope) ஆகும். இதைப் பயன்படுத்தி எதிரிகள் இருக்கும் இடத்தை எதிரிகளுக்குத் தெரியாமல் தெரிந்து கொள்ளலாம். இக்கருவியிலிருந்து செல்லும் சிவப்புக் கீழ்க்கதிர்கள் எதிரிலிருக்கும் பொருளில் பட்டுத் திரும்பிக் கருவிக்கு வந்து, புலனாகும் ஒளியாக மாறி, அப்பொருளை நமக்கு நன்றாகத் தெரியும்படி செய்கின்றன. இக் கருவியினைப் பயன்படுத்தித்தான் அமெரிக்கர்கள் 'ஓகினாவா'வை (Okinava) வென்றார்கள் என்று கூறப்படுகின்றது. துப்பறிவதற்காகவும் சிவப்புக் கீழ்க்கதிர்கள் மிகுதியும் பயன் படுத்தப் படுகின்றன. இறுதிமுறி (Will) ஒன்றில் கீழிருந்த எழுத்துகள் இலச்சினையிடும் மையினால் மூடப்பட்டுத் தவறாகப் பயன்படுத்தப் படும்போது இலச்சினைக்குக் கீழுள்ள எழுத்துகள் என்னவென்பதைச் சிவப்புக் கீழ்க்கதிர் புகைப்படப்பெட்டி படம் எடுத்துக் காண்பித்து விடுகின்றது துப்பறிபவர்கள் இறுகிமுறிகள், காசோலைகள் (Cheques) ஆகியவற்றை நேர்காண இதைப்பயன் படுத்துகின்றார்கள்.

பொருள்களின் மூலக்கூற்று அமைப்பை (Molecular Structure) அறிந்து கொள்ள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சிவப்புக் கீழ்க்கதிர்களைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு கண்டு பிடிக்கப் பயன்படும் கருவிக்கு 'போலோ மீட்டர்' (Bolometer) என்று பெயர். இது மிக்க நுண்மை பொருந்திய கருவியாகும். நூறில் ஒருபாகை (1^0C) அளவிற்குக் குறைவான வெப்பமும் இக் கருவியை வேலைசெய்யத் தூண்டி விடும் போலோ மீட்டரைப் பயன்படுத்தி விண்மீன்களின் தொலைவைக்கூடக் கண்டுபிடிக்க லாம்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் புதையுயிர்த்தடங்களில் மங்கலாகத் தெரியும் அமைப்புகளையும், இடிபாடுகளில் காணும் ஓவியங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளச் சிவப்புக் கீழ்க் கதிர்களைப் பயன்படுத்துகிறார்கள்.

சன்-யாட்-சென் (Sun-yat Sen)

—புலவர். சி. இராமசாமி, க. இ.

சீனாவின் புதுவாழ்விற்கு அடிகோலிய பெருமகன் சன்-யாட்-சென். "நான் ஒரு கூலி; கூலியின் மகன. ஏழைகளோடு பிறந்தேன்; ஏழையாகவே இருக்கிறேன். அன்றாட வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களிடத்தில்தான் என் இரக்கமெல்லாம் செல்கிறது" என்று கூறிக்கொள்ளும் இக் கூலியினுடைய தலைக்கு ஓரிலக்கம் பொன்மதிப்புப்போட்டது மஞ்சூ அரசு. அஃதாவது, "இவனை உயிருடன் பிடித்துக்கொண்டு வருபவர்களுக்கு ஓரிலக்கம் பவுன் அன்பளிப்பாக அளிக்கப்படும்" எனும் ஆணையை மஞ்சூ அரசு வெளி விட்டது.

மஞ்சூ ஆட்சியை ஒழித்து, குடியரசைச் சீனாவில் நிறுவச் சன்-யாட்-சென் பட்ட பாடுகளுக்குக் கணக்கே யில்லை. இவனேற்ற

(முன் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர்கள் மாந்தர்களின் பாய்குழல்கள் (Arteries), வடிகுழல்கள் (Veins) ஆகியவற்றை ஆராய இக்கதிர்களைப் பயன் படுத்துகிறார்கள். இதுமட்டுமல்லாமல் தசைகளுக்கு ஒத்தடம் கொடுப்பதற்காக வெப்பத்தை உண்டுபண்ணவும், அறுவை மருத்துவம் செய்யும் பொழுது நோயாளி மூச்சுவிடும் முறையை நேர்காணவும், உடலில் நோயுள்ள பாகத்தை அறியவும் இக்கதிர்கள் பயன் படுகின்றன. சிவப்புக் கீழ்க்கதிர்ப் புகைப்படப்பெட்டி, வெப்பப்படம் (Thermogram) எடுக்கின்றது. இப்படத்தில் மாறுபட்ட பழுப்பு வண்ணத் திண்மைகள் (Shades) காணப்படும் திண்மை குறைவான பழுப்பு வண்ணப் பகுதி (Lighter gray) வெப்பமான பகுதியையும், திண்மை அதிகமான பழுப்பு வண்ணப்பகுதி (Darker-Gray) குளிர்ந்த பகுதியையும் காட்டுகிறது. கெட்டுப்போன அல்லது நோயால் தாக்கப்பட்ட இடத்தில் குருதி மையம் கொள்வதால் (மிகுந்திருப்பதால்) அப்பகுதிகள் வெப்பமாக இருக்கும். இவ்வாறாக மருத்துவர்கள் வெப்பப் படத்தைக்கொண்டு நோய்ப்பட்ட பகுதியைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். புதிதாக ஒளியம் பூசப்பட்ட வண்ணத்தைக் காய வைக்கவும் நீர்மூழ்கிக் கப்பலினுள் உள்ள காற்றின் அளவை அறியவும், தொழிற்சாலைகளில் உள்ள வாலைகளின் சுவர்களில் வலிவற்ற பாகங்களைக் காணவும் சிவப்புக் கீழ்க் கதிர்கள் பயன்படுகின்றன. இன்னும் புதிய புதிய பயன்களை அறிவியல் வல்லுநர்கள் கண்டுபிடித்த வண்ணமே இருக்கின்றார்கள்.

(தொடரும்)

குணுரைகள், பூண்ட மாறுவடிவங்கள், வைத்துக்கொண்ட புதுப் பெயர்கள், ஓடிஒளிந்த இடங்கள் எத்தனை, எத்தனையோ! மாபெரும் புரட்சியாக நடத்தியவையோ பதினொன்று. பத்துத்தடவையும் தோல்வியுற்று, பதினோராவது தடவை 1911–ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பத்தாம் நாள் வெற்றிகண்டான். சீனுவில் 1912–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல்நாள், முதன் முதலாகக் குடியரசு ஏற்பட்ட காலை, குடியரசுத் தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். ஆனுல், பதவியை ஏற்றுக்கொண்ட ஆறுகிழமைக்குள் யுவான்–சி–காய் (Yuan-Shih-Kai) என்பவனுக்கு அதனை அளித்துவிட்டான்.

இதன் விளைவாக மீண்டும் உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுதியாகத் தலைவிரித்தாடின். ஆயின், இதற்காகச் சற்றும் இவன் மனந் தளர்ந்தானில்லை. தன் எண்ணங்களையும் ஆற்றலையும் நாட்டை உய்விக்கும் பணிகளில் செலவழித்தான். "அரசியல் புரடசி நடத்தி, அந்த வேலையை ஒருவாறு முடித்துவிட்டேன். குமுகாயம், தொழில். வாணிகம் போன்ற துறைகளில் நாட்டை மாற்றியமைக்கும் பணிகளைச் செய்ய முனைந்து இப்போது என எண்ணங்களையும் ஆற்றலையும அவ்வழியில் செலவழித்துக் கொண்டிருக்கிறேன்" என்முன். குடியரசுத் தலைமைநிலையைத் துறந்ததிலிருந்து இறுதி மூச்சுவரை நாட்டு நலனுக்காகவே பாடுபட்டான்.

சன் சீனுவின் தெற்குப் பகுதியிலுள்ள குவாங்டுங் (Kwangtung) மாநிலத்தில் காண்டன் (Canton) எனும் புகழ்பெற்ற துறைமுகப்பட்டணத்திலிருந்து முப்பதுகல் தொலைவிலுள்ள சூயிகெங் (Tsuihung) எனும் சிற்றூரில், 1866–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 12–ஆம் நாள் சன்–டாவ்–சுவான் (Sun-Tai-Cheong) என்பவனுக்கு இளைய மகனுகப் பிறந்தான்.

இளமையில் சன்–டை–சியோங் என்றழைக்கப்பட்டான். 'டை–சியோங்' என்முல் 'கடவுளின் தொண்டன்' என்றே பொருள். கடவுளின் தொண்டன் பாட்டாளி மக்களின் தொண்டனுனதில் வியப்பொன்றுமில்லையே! ஆமி என்பவன் இவன் உடன் பிறந்தவன், மூத்தவன். சன்னின் பிற்கால வாழ்வில் பொருளுதவி செய்தவன். சன் இளமையிலேயே பொருள்விளங்காப் பகுதிகளை மனப்பாடம் செய்தலை வெறுத்தான். அறிவுக்குப் பொருந்தாத பழைய பழக்க வழக்கங்களைக் கண்டித்து வந்தான். சீனஉழவர்கள் படும் தொல்லைகளைக்கண்டு இவனது இளமையுள்ளம் உருகிற்று.

ஏழ்மையின் காரணமாக, சன் தன் பதின்மூன்றும் அகவையில் பெற்றோரால் அவாய் (Hawai) தீவுக்கு அனுப்பப்பட்டான். அங்கு ஒனலூலுவில் அயோலானி கல்லூரியில் (Ayoloni College) சேர்ந்து நான்கு ஆண்டுகள் ஆங்கிலக் கல்வி பயின்றான். இப்பள்ளி வாழ்வே இவன் வாழ்வில் மறக்கவொண்ணா நிகழ்ச்சிகட்கு வித்தூன்றிற்றெனின் மிகையாகாது. இவனுக்குக் கிறித்துவ சமயத்தில் சேர எண்ணம் உண்டானது இங்குதான். பிறகு 1884-ஆம் ஆண்டு தன் பதினெட்டாம் அகவையில் பெற்றோரின் விருப்பிற் கெதிராகக் கிறித்துவ சமயத்தில் சேர்ந்தான்.

சமயநெறி மாறியதால் ஊராரின் தூற்றுதலுக்கும், பெற்றோரின் வெறுப்பிற்கும் ஆட்பட்ட சன், திருமணமான ஓராண்டு கழித்துத் தன் ஊருக்கே 'கிறித்துவ நெறி விரிவுரை' நிகழ்த்த வந்தானெனின் இவனது மனவூக்கத்திற்கு இதைவிடச் சிறந்த சான்று வேண்டுவதில்லை. எவரிடத்திலும் அன்பாகவும் பணிவாகவும் இவன் நடந்துகொண்டதால் இவனை எதிர்த்தோ, அன்றி இவன் கொண்டிருந்த கொள்கைகளைக்கண்டித்தோ, பேச யாருக்கும் உறுதி பிறக்கவில்லை. பிறகு இவனும் இவன் நண்பன் லூவும தூயிங்கசு கோவிலுக்குச் சென்று அங்கிருந்த கடவுள் உருவங்களைச் சிதைத்ததற்காக இவன் ஊரினின்று வெளியேற்றப்பட்டான். ஊராரின் இச்செயலே இவன் வாழ்க்கை ஒளிவிட வழிகாட்டியதெனலாம். இவன் தந்தை 1883-ஆம் ஆண்டு இறந்ததற்கு இதுவும் கரணியமாயிற்று எனல் பொருந்தும். பிறகு 1884-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் நாள் சீனமுறைப்படி லூதூ என்ற தன்னினப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்வினைத் தொடங்கினான்.

ஆமியின் உதவியால் சன் ஆங்காங் (Honkong) நகரிலிருந்த அரசி கல்லூரியில் (Queen's College) சேர்ந்து படித்தபொழுது சீனமொழியில் வல்லுநன் ஆனான். பின்பு காகர் என்பவரின் துணையால் மருத்துவக்கலை பயின்று பட்டமும் பெற்றான். சன் எப்பொழுதும் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டான்; அனைவரையும் அன்பால் கவர்ந்தான். இலண்டன் வாழ்க்கையில் சன்னின் உயிருக்கு இடையூறு வந்த காலத்தில் காண்டலி என்ற மருத்துவர் காப்பாற்றினார். அதனாற்றான் சன் சீனாவின் தலைவனானதும், இக் குடும்பத்தினருக்கு முதலில் நன்றி மடலொன்று எழுதினான். மருத்துவத் துறைக்குப் படித்த காலத்தை, "புரட்சிக்கு எனை அணியம் செய்துகொண்ட காலம்" என்று சன் கூறுகின்றான்.

இவன் 1892-ஆம் ஆண்டு மருத்துவப்பட்டம் பெற்றதும் தன் பெயரை, சன்-யாட்-சென் என மாற்றிக்கொண்டான். மாக்கோ நகரில் மருத்துவமனை வைத்துப் பணியாற்றினன். மாக்கோ நகரப் போர்ச்சுகீசிய மருத்துவர்கள் சன்னின் புகழால் தங்களின் வருவாய் குறைவுறும் என எண்ணி அரசுவாயிலாக இவன் தொண்டினைத் தடுத்துவிட்டனர். குமுகாயத் தொண்டனுக்கு எங்குச் சென்றாலும் எந்நாட்டிலும் இதே நிலைதான் போலும்! ஆதலின் வேலைக்காக லூ என்ற நண்பனுடன் கால்நடையாகவும் படகு மூலமாகவும் தீண்ட்சின் (Tientsin) என்ற பெருநகரடைந்தான். இப்பயணமே இவன் வாழ்க்கையில் புதியதொரு பட்டறிவைக் கொடுத்ததெனலாம். வேலை தேடிச் சென்றவன், மக்களின் குறைபாடுகளடங்கிய ஓர் அறிக்கையை அரச ஆணையாளரிடம் கொடுத்தான். இம்முதல் முயற்சியிலேயே இவன் பெருந்தோல்வி யடைந்தான். இத்தோல்வியே இவனைச் சீனாவின் தலைவனாக்கியது எனின் மிகையாகாது.

சீனநாட்டின் முன்னேற்றத்திற்கும் செழுமைக்கும் துணையாக 1894-ம் ஆண்டின் இறுதியில் அவாய் தீவில் முற்போக்குச்சீனர்கள் கழகத்தை, நிறுவினன். மஞ்சூ ஆட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து சீனர்கள் தாங்கள் ஆளப்படுகின்ற இனத்தவர் என்பதைக் குறிக்கத் தலையின் முன்பாகத்தை மழித்தும், பின்பாகத்தின் கூந்தலை நீட்டியும் வைத்திருந்தனர். சன் இந்த மானக்கேட்டைத் துடைக்கக் கருதி அவ்வழியே செய்தும் காட்டினன்.

மஞ்சூ ஆட்சிக்கு எதிராக இவனால் 1895-இல் தொடங்கப்பட்ட முதற்புரட்சி தோல்வியே கண்டது. புரட்சிக்கு அணியமான இவனுக்குக் கிடைத்த முதற்பரிசு இத்தோல்வியே. ஆயின் இம் முதற்றோல்வி முற்றிலும் தோல்வியாகாமல், இறுதியில் வெற்றியே யளித்தது. இம் முயற்சியின் பலனாக மஞ்சூ அரசு இவன் தலைக்கு ஓரிலக்கம் பவுன் பரிசு அளிப்பதாக அறிவித்தது. ஆதலின் இவன் வேற்று நாடுகளுக்குச் செல்லவேண்டிய இன்றியமையாச் சூழல் ஏற்பட்டது. இருப்பினும் 1896-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 11-ஆம் நாள் இலண்டன் மாநகரில் மஞ்சூ அரசின் ஒற்றரால் வஞ்சனையால் பிடிக்கப்பட்டு காண்ட்லியின் உதவியால் விடுவிக்கப்பட்டான்.

இலண்டன் மாநகரில் வாழ்ந்தபோதுதான் பாட்டாளி மக்கள் படும் இன்னலையும் செல்வர்கள் வாழும் செழுமையான வாழ்க்

கையினையும் கண்டு உள்ளம் குமுறினான். அப்பொழுதே குமுகாயத்தில் பெரியதொரு மாற்றஞ் செய்யவேண்டுமென உறுதியுங் கொண்டான். சார் (Zar) மன்னனால் உருசிய நாட்டிலிருந்து கடத்தப்பட்ட சிலரைக்கண்டுபேசினான். நில உரிமையாளர்களின் தலைமைப்போக்கை யொழிக்கப் 'புரட்சியைத் தவிர வேறு வழியில்லை' என்றுணர்ந்தான். பலவின்னல்கட்கிடையே ஐரோப்பா முழுவதையும் நடந்தே சுற்றிப் பார்த்து, **'சீனாவில் மஞ்சு ஆட்சியை ஒழித்துக் குடியாட்சியை நிறுவவேண்டும்'** என்று மனவுறுதியும் பூண்டான்.

மஞ்சு அரசின் தொல்லைகட்கஞ்சி சன் சப்பான் நாடு சென்று யோகாகாமா (Yokohama) என்ற விடத்தில் தங்கித் தன் திட்டங்களைச் செயற்படுத்த முயன்றான். இக்காலத்தில் தன் தாய் நாட்டின் வருங்கால வாழ்க்கையில் வைத்த அசையா நம்பிக்கையின் அறிகுறியாக அவன்பட்ட இன்னல்கள் அளவிறந்தன. ஆயின்; இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்-துன்பம் உறுதல் இலன்" என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கிணங்க, மனந்தளராது பணியாற்றிக் கொண்டிருந்தான்.

எந்தவொரு புரட்சிக்கும், குமுகாயத்தின் குறிப்பிட்டதொரு வகுப்பினருடைய துணைபெற்றால் மட்டும் போதாது; பாட்டாளி மக்களின் பெருஞ்சார்பும் வேண்டும் என்பதை யுணர்ந்தான். ஆதலின் பாட்டாளிகளிடஞ் சென்று சீனாவின் தாழ்நிலையைப் பற்றியும் சீனாவைக் கைப்பற்ற வேண்டிய காரணம் பற்றியும் விளக்கமாகக் கூறினான். ஒனலூலுவில் பொதுக்கூட்டங்களைக் கூட்டித் தன் கருத்துகளை, ஆரவாரமின்றி நுண்மான் நுழைபுலங் கொண்டு, கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் எடுத்துரைத்தான். அதன் வாயிலாய் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்தான். இவன் 1903–ஆம் ஆண்டு திசம்பர்த்திங்கள் செய்த முதற்சொற்பொழிவு, இவனை அண்டை நாட்டினருக்கும் அறிமுகப் படுத்தியது எனலாம்.

நாட்டின் நலனுக்கு மாணவர்கள் உதவி தேவையெனக் கருதி அவர்களைத் தன்வயமாக்கிக் கொண்டான். தான் கொண்டுள்ள குறிக்கோள் நிறைவேற எத்தனையோ உயிர்களை இறப்புக்கு இரையாக்க வேண்டியிருக்கும் என்பதையும் தொடக்கத்திலேயே உணர்ந்தான், தன் எண்ணங்களை யாவருமறியச் செய்ய

'மக்கள் தாளிகை' (Min Pao) தொடங்கினான். தாளிகை என்பது தம்மவர்களைப் பிணித்துப் பகைவர்களைத் தாக்குகின்ற கூரிய கருவியன்றோ?

சன்-யாட்-சென் 1912-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் முதல் நாள் மஞ்சூ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற சீனாவின் குடியரசுத் தலைவனானான். தூய்மையான உள்ளமும் பிறரிடம் நம்பிக்கையும் கொண்ட சன், யுவான் சிகாய் என்ற தந்நலக்காரரின் செயலில் நம்பிக்கைகொண்டு, தன் தலைமைப் பதவியை பிப்ரவரி 23-ஆம் நாள் அவருக்குக் கொடுத்துவிட்டு நாட்டின ஆக்க வேலையில் ஈடுபட்டான். கோமிங்டாங் (Kuomingtang) என்ற ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கி நாடெங்கணும் பயணஞ் செய்து குடியரசுக்கு ஆக்கந்தேடினான். யுவானின் சூழ்ச்சியினால் 1913-ஆம் ஆண்டு சூலைத்திங்களில் சன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் சப்பான் நாட்டிற்குத் தப்பியோடும்படியாயிற்று ஆயின், தொடர்ந்து முயற்சிசெய்து 1917-ஆம் ஆண்டின் இடையில், தென்சீனாவில் காண்டன நகரில் அரசினைத் தொடங்கித்தானே தலைமையேற்றான். தனக்குத்துன்பம் நேரிட்ட பொழுது 'என் உயிர் பெரிதன்று; எனக்கு வெற்றி முதனமையன்று; நாட்டிற்கு வஞ்சனை செய்கிறவர்களை அப்புறப்படுத்த வேண்டியது என கடமை' என்று கூறினான் சன். புதுமுறையிலமைந்த சீனப்படையொன்றை 1923-ஆம் ஆண்டு உருவாக்கினான்.

சன் சாவுப்படுக்கையில் எழுதிய ஆவண முறியல் (Will) 'மக்களுக்குத் தொண்டு செய்வதிலேயே என் வாழ்க்கை முழுமையும் செலவழித்து விட்டபடியால் எனக்கொன்று தனியாகச் சொத்துக்கள் சேர்க்க எவ்வகை வாய்ப்பும் பெற்றேனில்லை' எனக் குறிப்பிடுகின்றான்

1925-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாள் தனது 58-ஆம அகவையில் சாவு இவனைத் தழுவும் பொழுதுகூட "அமைதி உண்டாகட்டும்" என்று சொல்லிக்கொண்டே உயிர் விட்டான்.

'சன்'னின் எளியவாழ்வு, உயர்ந்த நோக்கம், பரந்த அறிவு, அகன்ற தூயமனம், ஓயா உழைப்பு போன்றவை அவனது வெற்றிக்குத் துணை நின்றன. "சன்னை பெஞ்சமின் பிராங்கிளினுடனோ கரிபால்டியுடனோ ஒப்பிடுதல் பொருத்தமன்று; அவன் தனிச் சிறப்புடையவன்" என்று எல்லிசு பார்க்சு கூறுவது போன்று, அயலாராட்சியில் வீழ்ந்துகிடந்த நாட்டின அடிமைத்துயர் துடைக்க நாட்டு நலனில் கருத்துக்காட்டி, தன்னலங்கருதாது பிறர் நலம் பேணி, பல இடையூறுகளை வென்று, ஏழ்மை நிலையிலும் மனந்தளராது குமுகாயத்திற்குச் செய்யும் தொண்டே பயனுடைய தெனவெண்ணிச் செயலாற்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனைச் 'சீனக்குடியரசின் தந்தை' என்றழைக்கின்றனரெனின் அது புகழுரையன்று, பொருளுரையே! O

மண்புழுவும் உழுமண்ணும்
(EARTHWORMS AND AERABLE SOILS)

–மா. பழநிச்சாமி, வேளாண் கல்லூரி, கோவை.

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

மண்புழுவிற்கும் மண்ணுக்கு மிடையே யுள்ள இன்றியமையா இயக்கத் தொடர்புகளை முதன்முதலில் உலகுக்கு அறிவித்தவர் பேரறிஞர் சார்லசு தார்வின் என்பவரே யாவார். பெர்லினைச் சேர்ந்த முல்லர் (Muller) என்பவரும் மண்புழுக்களின் வாழ்க்கை முறைகளையும், குழுவியல் அமைப்புகளையும் படம்பிடித்துக் கூறுங்கால் அடர்ந்த காடுகளிலும், மற்றும் பல இலைமட்குகள் நிறைந்த மண்ணிலும் வாழும், நிலம் வாழ் உயிர் இனங்களுள் மண்புழுவே தலைசிறந்த வாழ்க்கை நடத்துகிறது என்று கண்டறிந்து உரைக்கின்றார்.

வாழ்க்கை வரலாறு:– புணர்ச்சி மூலம் இனவளர்ச்சி செய்யும் இந்நாங்கூழ்ப் புழுக்களுள் ஒருசில இனங்கள் முட்டையிட்டும் இனத்தைப் பெருக்குகின்றன. புதிதாகப் பிறந்த இளம் புழுக்கள் நன்கு வளர்ந்து 6 முதல் 18 மாதங்களில் பால்வளம் பெற்றுப் புணர்ச்சி புரியும் தகுதியை அடைகின்றன. ஒரு புழுவின் வாழ்க்கைக் காலம் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் என்று கூறுகின்றார்கள்.

இனப்பிரிவுகள்:– (Classification) தெளிவும், நுணுக்கமும் நிறைந்த பாகுபாடுகள் இன்னும் வளர்ச்சியடையவில்லை. எனினும் இதுவரை நடத்திய ஆழ்ந்த ஆராய்ச்சிகளின்படி நான்கு வகைப்பட்ட புழுவினங்கள் இருப்பதாக இங்கிலாந்து நாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். அவற்றுள் 25 நூறு கீழ்க்கோல் நீளமும் 7 சீரொடையும்கொண்ட மிகப்பெரிய இனமும், 2.5 கீழ்க்கோல் நீளமும் 0.05 சீரொடையுமுள்ள மிகச்சிறிய இனமும் குறிப்பிடத்தக்கவை. எனினும் நாளும் நடைபெறும் உழுதொழில் முறைகளால் பெரிதும் தாக்குதலுக்குள்ளாகின்ற இச்சிறு புழுவினங்கள் நம் இரக்கத்திற்குரியன.

உணவும் உண்ணும் வகையும்: (Food and Feeding Habit)– பெரும்பாலான புழுக்கள் நிலத்தின் மேற்பரப்பில் காணப்படும் மட்கிய இலைத் துணுக்குகளையும் பிற உறுப்பியல் பொருட்களையும் உண்ணுகின்றன. இன்னும் சில, தரையின் கீழிருந்து மேல்மட்டத்திற்கு வந்து அங்கே கிடைக்கும் உணவுப் பண்டங்களைப் பற்றி இழுத்துக்கொண்டு

மண்ணிற்குள் சென்று உண்டு மகிழ்கின்றன. பொதுவாக இவை மாட்டுச்சாணம், எல்ம் மரக் காடுகளில் காணப்படும் சாம்பல், சுடூழாங்கல் ஆகியவற்றை விருப்பத்துடன் உண்ணுகின்றன.

துணைபுரியும் நிலைகளும் பொருத்தமற்ற நிலைகளும்:— (Suitable and unsuitable Conditions) சில குறிப்பிட்ட நல்ல மண்வள நிலையில்தான் இந்நாங்கூழ்ப் புழுக்கள் சிறப்பாக வாழுகின்றன. இவை பனியையும், வறட்சியையும் தாங்கமாட்டா. உலர்ந்த மணல் சார்ந்த நிலமும் பாறைகள் படிந்த நிலங்களும் மண்புழுக்களின் வெற்றியான வாழ்க்கைக்குத் தடைகளாயிருக்கின்றன. ஆனால் அவை உலர்ந்த காற்றோட்டமான மண்ணையே விரும்புவதால், களிமண்ணும், வடிகால் வசதியற்ற மண்ணும் விரும்பத் தகாதவையே. எனவே குறுமண் (Loam) நிலத்தில் மிகுதியாகவும், மணல், சரளைக்கற்கள் ஆகியவை கலந்த மண்ணில் குறைந்த எண்ணிக்கையிலும் இவை வாழ்கின்றன.

முன்பனிக்காலம், இலையுதிர்காலம் ஆகிய காலங்களில் நிலத்தின் மேற்பரப்பில் அளவான வெப்பமும், குறைவான குளிர்ச்சியும் காணப்படுவதால் இப்புழுக்கள் வளமான வாழ்க்கைநடாத்துகின்றன. இசுடாக்கில் (Stockle) என்ற அறிவியலாளர் இவவுண்மையை விளக்கக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டைக் கூறுகிறார். ஏப்ரல் முதல் சூன் வரை $16\frac{1}{2}''$ மழை பெய்த காரணத்தால் நிலத்தில் நிறைந்துவிட்ட நாங்கூழ்க் கட்டிகளின் எடை 10 கல்லெடையாக உயர்ந்துள்ளது. இவ் எடைப் பெருக்கம் மண்புழுக்களின் நலமான வளம்நிறைந்த வாழ்க்கைக்குப் பெருந்துணை புரிகிறது.

இடிமோ என்ற பேராசிரியரும், ''குதிரை மசால் வளர்க்கப்படும் பாசன வசதி படைத்த நிலத்தில் அறுபது நூறாயிரம் துளைகள் காணப்பட்டன; இவையனைத்தும் மண்புழுக்களால் ஏற்பட்டவையே'' என்று கூறுகிறார். இவ்வெண்ணற்ற துளைகள், நிலத்தின் மேற்பரப்பில் பாயும் நீர், கீழ்மட்டத்திற்கு எளிதில் வந்தடையப் பெரிதும் துணை செய்கின்றன. இப்புழுக்கள் உழுதுவந்த நிலம் வளமுடையதாயுள்ளது. மண்துகளோடு சேர்த்துண்ணப்படும் இலைமட்குகள், மற்றும் பல உறுப்பியல் பொருட்கள் (Organic matters) அனைத்தையும் ஒன்றாக இணைத்துக் கற்குடலிலிருந்து சுரக்கும் சுண்ணக்கரியகத்துடன் பொருத்தி இயைத்துப் பதப்படுத்தப்பட்ட செழுமையான மண்கட்டி

களை இவை வெளிக்கொணர்ந்து, நிலத்தை உரங்கொண்டதாகவும், விளைவுத்திறன் உடையதாகவும் பண்படுத்துகின்றன. இவ் வளங் கொழிக்கும் நாங்கூழ்க் கட்டிகள் செம்மண் நிலத்திற்கு நீரைத்தாங் கும் ஆற்றலைத் தருகின்றன. களிசார்ந்த கரிசல் நிலத்தில் மண்ணின் செம்மையான நிலைக்காகப் பெரிதும் இவை போராடுகின்றன.

நாங்கூழ்க்கட்டியின் வேதியல் பொருட்கூறு:- (Chemical Composition of Earthworm Castings) இம் மண்கட்டிகள் பொது வகை மண்கட்டிகளைவிட வளமுடையவையாக உள்ளன. ஏனெனில் இம் மண்புழுக்கள் நிலத்தில் காணப்படும் ஒரு தனிப்பட்ட வகையைச் சார்ந்த உணவுப் பொருள்களையே தேர்ந்தெடுத்து உண்ணுகின்றன. அத்தகைய உணவுப் பொருள்கள் உடலில் செரிக்கப்பட்டுக், கழிவுக ளாக மாற்றம்பெறும் நிலையில், வெடியமும் (Nitrogen) கனிப் பொருள் சாரமும் (Minerals) நிறைந்த தன்மை பெறுகின்றன என்ற உண்மை இயற்கையின் படைப்புகளுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் சான்றாய் நிற்கின்றது. எனவேதான், இந் நாங்கூழ்க்கட்டிகள், ஏனைய மண்கட்டிகளைக் காட்டிலும், நிலத்திணைகளுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய சாரங்களை மிகுதியாகப் பெற்றிருக்கின்றன என்று கூறுகின் றோம். உறுப்பியல்பொருள்கள் (Organic matters) நிறைந்த- அடர்ந்த காடு, பசும்புல்வெளி, மிகுதியாக உரமிடப்பட்ட- காற்றோட்டம் நிறைந்த உலர்ந்த மண் ஆகிய இடங்களே இந் நாங்கூழ்ப் புழுக்களின் செழித்த வாழ்க்கைக் குதவுகின்றன. நியூயார்க் மாநகரின் அடர்ந்த காடுகளில் பலவகையான பத்து நூறாயிரம் புழுக்கள் வாழ்வதாகக் கணித்துள் ளார்கள் வேல்சு நாட்டின் புல்வெளியில் குறுக்கத்திற்கு முப்பது நூறாயி ரம் புழுக்கள் வாழ்வதாகவும் கணக்கிட்டுள்ளார்கள். தொழு உரங்கள் இடம்பெறாத நிலத்தில் மண்புழுக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந் துள்ளது என்ற உண்மை, அவற்றின் வாழ்க்கையில் உறுப்பியல் பொருள்களின் பெரும்பங்கை எடுத்துக் காட்டுகிறது.

நிலத்தைப் பண்படுத்துவதில் மண்புழுவின் பங்கு:- நிலப்பரப் பில் காணப்படும் உலர்ந்த இலைகளையும், சருகுகளையும், மற்றுமுள்ள கூளங்களையும் சத்து நிறைந்த மண்கட்டிகளாக மாற்றுவதற்கு, இந் நாங்கூழ்ப் புழுக்களைத்தவிர வேறொரு சிறந்த துணைவர் கிடைப்பது அரிது. புளியச்சாரம் நிறைந்த மண்ணில்தான் மண்புழுக் கள் மிகுதி யாக வாழுகின்றன.

மண்ணை உலர்த்துவதில் மண்புழுவின் பங்கு:- பொந்துகளையும், குறுகிய வளைகளையும் கட்டுவதில் கைதேர்ந்த உயிரினங்கள் இப் புழுக்களே. இத்துளைகளே மேல்நிலத்தின் சிறந்த வடிகால்கள் மேலும் இப்புழுக்கள் உலவி வரும் நிலப்பரப்பு அனைத்தும் மென்மையாகிறது. சில சமயங்களில் தாவரங்களின் வேர்களும், வேர்த்தூவிகளும் எளி தில் மண்ணைத் துளைத்துச் செல்வதற்கு இத் துளைகளும், மண்ணின் மென்மையான நிலையும் துணையாகின்றன.

மேலும், நாங்கூழ்க்கட்டிகள் இத் தனித்தன்மை பெறுவதற்கு மண்புழுவின் உணவுமண்டலத்தில் குடியிருக்கின்ற பலதிறப்பட்ட ஓர்–அறை உயிரினங்களே (Amoeba) காரணம் ஆகும். இத்தகைய மாபெரும் புரட்சியைச் செய்யும் இப் புழுக்கள், வளரும் பயிர்களுக்கு எவ்விதத் தொல்லையும் செய்வதில்லை. ஆனால் இறந்த பின்னும், இப் புழுக்களின் உடல் மண்ணில் இருக்கும் வரை, மண்ணின் உப்புத் திறன் குவியலில் (Nitrogen reserve) மாற்றந்தரா அடையாளங்க ளாக உள்ளன என்று கூறின் அது மிகையாகாது. ●

அன்பர்கள் கவனிக்க.

நம் மொழிப்பேரறிஞர் பாவாணர் அவர்கள் முதுமை காரணிய மாக உடல் நலம் குன்றியிருப்பதாலும், தம் வாழ்நாளுக்குள் எழுதக் கருதியிருக்கின்றனவும் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் மிகவும் இன்றியமையாதனவுமாகிய பல அரிய நூற்களை எழுதி வெளியிடும் முயற்சியில் முழுமூச்சோடு ஈடுபட்டிருப்பதாலும், கூட்டங்களுக் கென அடிக்கடி வெளியூர் வருவதற்கு இயலாத நிலையில் இருக்கின் றார்கள். எனவே சில இன்றியமையாத கூட்டங்களுக்கன்றி அவர் களை வீணே அழைத்துத் தொல்லைதர வேண்டாவென அன்பர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அவருடன் தொடர்பு கொள்ள விரும்பும் அன்பர்கள் கீழுள்ளவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிக் கொள்கின்றேன்.

(க) பாவாணர் அவர்களுக்கு மடல் விடுப்பார், விடைபெறவிரும் பின் அதற்குரிய அஞ்சல் முத்திரைகளையோ, உறைகளையோ உடன் விடுத்தல் வேண்டும்.

(உ) கட்டுரை வேண்டுவார் முன்கூட்டியே அவர்பெயருக்கு உருபா 50 விடுக்கவும்.

(ங) சிறப்புக் கூட்டங்களுக்கு அழைக்க விரும்புவார் 200 உருபா முன்பணமாகவும் 200 உருபா பின்பணமாகவும் அவர்க்குத் தருதல் வேண்டும். பணமுடிப்புக் கொடுக்கப்பெறும் கூட்டமாயின் இது விலக்கு.

-பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலர், உலகத் தமிழ்க் கழகம்.

பாவேந்தர் நன்றிக்கடன்.

பேட்டைவாய்த்தலைச் சிற்றூர்தலைவர் திரு. மு. வேலாயுதம் அவர்கள் தொகுத்து விடுத்த தொகை:

	உருபா	காசு
பாவேந்தர் அன்பர் குடும்பம்-1,	15	00
பாவேந்தர் அன்பர் குடும்பம்-2.	10	00
நச்சலூர் அன்பர்கள் (திரு. முருகன்வழி)	8	00

உருபா 5 மேனி வழங்கியவர்கள்

திருவாளர்கள் கு. பிச்சை, இரெ. பிச்சை, சு. செல்வநாயகம், பால. கிருட்டிணன். 20 00

உருபா 3 மேனி அளித்தவர்கள்.

திருவாளர்கள் கு. அரங்கசாமி, பி. எசு. சுப்பிரமணியன், இலெ. இராம. சுப்பிரமணியன் 9 00

உருபா 2 மேனி கொடுத்தவர்கள்.

திருவாளர்கள் இரா. கிருட்டிணமூர்த்தி, பழநிச்சாமி, தி. பி. நாகப்பன், ஆர். வி. அரசாங்கம், எசு. கரும்பாசலம். மா. இராசகோபாலன், இராமகிருட்டிணன், கோ. பத்மநாபன், த. இராமசாமி, எம். ஆறுமுகம், எ. பெருமாள், மொ. மாணிக்கம். மு. திருமேனி. 26 00

உருபா 1 மேனி கொடுத்தவர்கள்.

திருவாளர்கள்: பி. குழந்தைவேலு, மு. சுவாமிநாதன். பி. இரெத்தினம், எம். மாணிக்கம், ஆர். இராசேந்திரன், மு. செயராமன், சா. திருஞானசம்பந்தம், குழந்தைவேலு, ப. கோவிந்தன், முருகேசன், பழநியப்பன், மகாலிங்கம், முத்துச்சாமி. ஆர். சண்முகம், இரெ. சுப்பிரமணியன், அல்பீசு, கத்தூரி அரங்கன், வெ. பிச்சைக் கண்ணன், சு. கோவிந்தன், திருவாட்டி. வை. சுந்தரம், திருவாளர்கள் என். சீநிவாசன், மா. பிச்சை, பெ. மருதை. 23 00

திரு. பி. அயிரன் 0 50

	111	50

	உருபா–காசு	
முன்பக்கப்படி	111	50
சண்டிகார். திரு, அழ. அழகர்சாமி அவர்கள்	10	00

அவர்வழி உருபா 5 வழங்கியவர்

திரு. பா. இராசேந்திரன்	5	00

உருபா 3 மேனி வழங்கியவர்கள்.

திருவாளர்கள், இரா. இராசேந்திரன், இராமன், சுப்பையா, பெருமாள்.	12	00

உருபா 2 மேனி கொடுத்தவர்கள்.

திருவாளர்கள்: கிருட்டிணசாமி, சந்திரமோகன், செயராமன்.	6	00

உருபா 1 மேனி கொடுத்தவர்கள்.

திருவாளர்கள்: அரங்கன், அரங்கராசுலு, ஏசுதாசு, காத்தனன், குப்புச்சாமி, சாமிநாதன், சின்னதுரை, சீவநேசன், சூரியநாராயணன், செகந்நாதன், தங்கையா, தருமராசன், பெரியசாமி, மணி, மார்க்கபந்து, மூர்த்தி, யோவான்.	17	00
திரு அமலன்	1	25

கல்லூர் ஓ. எம். மாங்குடி அவர்கள் வழி வரப்பெற்ற தொகை.

திருவாளர்: பெ. அரசு அவர்கள்	42	00
திருவாட்டி: கா, உருத்திராணி	35	00
திருவாளர்: கல்லூர், அ. சாத்தப்பன்	19	50

அவர்வழி உருபா 17–50 மேனி வழங்கியவர்கள்.

திருவாளர்கள்: சுப. சண்முகம், வீர. மெய்யழகன், திருவாட்டி, பெ. சானகி	52	50

உருபா 10–50 மேனி வழங்கியவர்கள்.

திருவாட்டி, மா. சாத்தம்மை, செல்வியர், கா. தேவி, கா. கமலா, திருவாளர்கள். மு. சுப்பையா, அரு. வீரப்பன் பெ. புதுமைப் பிரியன்.	63	00

உருபா 7 மேனி அளித்தவர்கள்.

திருவாளர்: வீர. கிருட்டிணன், செல்வி, மா. சாவித்திரி	14	00
மொத்தம்	388–75	
முன் மொத்தம்	1548–00	
தொகு மொத்தம்	1936–75	

உலகத் தமிழ்க் கழகம்.

(செய்தியும் அறிக்கையும்)

செய்திகள்

1 திருவாடானை -கிளைக்கழகம்.

உலகத்தமிழ்க் கழகத்தின் சார்பாக கன்னி உஎ (13-10-68) ஆம் பக்கல் திருவாடானையில் (முகவை மாவட்டம்) கிளைக்கழகம் ஒன்று தொடங்கப்பெற்றது. அன்று நடந்த தொடக்கவிழாவில் திரு. அருண் மணி, புலவர். திரு. வ. தமிழ்வளவன், திரு. மு. தமிழ்க்குடிமகன் க. மு. (உ, த. க மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் உரை நிகழ்த்தினர். புலவர். திரு. கதி. சுந்தரேசனுர் (பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை) அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் ஒன்றும் நடந்தது பட்டி மண்டபத்தில் திருவாளர்கள். மா. கண்ணப்பர், க. மு.. அரவழகனுர், இல. சிதபரனுர். தமிழ்க்குடிமகன், த. அரசகோபாலன், புலவர். பொன்னையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

2. புத்தனும்பட்டியில் பொற்கிழி வழங்குவிழா.

திருச்சி மாவட்டம், புத்தனும்பட்டியில் உள்ள தனித்தமிழ் அன்பர்களின் பெருமுயற்சியாலும், கழக அன்பர் திரு அ. முருகன் அவர்களின் பேருழைப்பாலும், துலை கக (27-10-68) அன்று அவ்வூரில், உலகத் தமிழ்க்கழகத் தலைவர், மொழிநூல் மூதறிஞர் தனித்தமிழ்த் தந்தை திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்து விழாவும், பொற்கிழி வழங்குவிழாவும் இனிதே நடைபெற்றன. முசிறி ஊராண்மைஒன்றியத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமை யேற்றுர். தென்மொழி யாசிரியரும் கழகப் பொதுச்செயலாளரும் ஆகிய திரு. பெருஞ்சித்திரனுர் அவர்களும், திருவாளர்கள் புலவர் வ. சா, சலியபெருமாள், துரை. நமச்சிவாயம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். திரு. அ. முருகன் நன்றி கூறினுர்.

3 பெங்களூர் பாவாணர் தமிழ்மன்றத் தொடக்கம்.

கருநாடக மாநிலமான பெங்களூரில் உ. த. கழகச் சார்பிலும், அங்குள்ள தனித்தமிழ் அன்பர்களின் பெருமுயற்சியாலும் பாவாணர் தமிழ்மன்றம் நளி க (24-11-68) அன்று காலை வசந்தநகரில் தொடங்கப் பெற்றது. அன்று மாலையே அம்மன்றச் சார்பில் ஓடுக்கத்தூர் மடத்தில் சிறப்புக் கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்திற்குக் கருநாடக அரசின் துணைக் கல்வி அமைச்சர் திரு. கொட்ரா பசவையா சோகி அவர்கள் தலைமை தாங்கினுர். உ. த கழகப் பொதுச்செயலாளர் திரு. பெருஞ்சித்திரனுர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர் பாவாணர் தமிழ்மன்றப் பொதுச்செயலர் திரு. பொன்னரசன் அவர்களும் கூட்டுச் செயலர் திரு. பெ. இனியன் அவர்களும் மன்றத் தொடக்கத்தின் நோக்கத்தையும் அதன் கொள்கைகளையும் விளக்கிப் பேசினர். மன்றத் தலைவர் திரு. மெய்ம்மொழி அவர்கள் அனைவரையும்

வரவேற்று ஆங்கிலத்தில் பேசினர். திரு. நிலவழகன் நன்றியுரைக்குப்பின் திரு. பெ. இனியன் அவர்களின் தமிழ் வாழ்த்துடன் கூட்டம் இரவு 9½-மணிக்கு முடிவுற்றது. கூட்டம் மிகவும் சிறப்பாகவும். பயனுடையதாகவும் இருந்தது குறிக்கத் தக்கது.

அறிக்கை-1

அ. மாவட்ட அமைப்பாளர்களுக்கு:

நெல்லை, குமரி, தகடூர். புதுவை தவிர பிற எல்லா மாவட்ட அமைப்பாளர்களுக்கும் உறுப்பினர் சேர்ப்புப் படிவங்கள், பற்று முறிகள், நெறிமுறைச் சுவடிகள் முதலியன விடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பெற்ற அமைப்பாளர்கள் தந்தம் மாவட்டங்களில் உள்ள ஊர்கள் எல்லாவற்றிலும் கிளைக்கழகங்களை ஏற்படுத்த எல்லாவகையான முயற்சிகளையும் செய்யக் கேட்டுக் கொள்கின்றேன். மாவட்டத் தலைவர்கள் தங்களுக்குகந்த செயலர்களையும், பொருளர்களையும் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஒவ்வோர் ஆங்கிலமாத முதல் நாளும் கீழ்க்காணும் மாத அறிக்கைகளைத் தலைமைக் கழகத்திற்கு விடுக்குமாறு மாவட்ட அமைப்பாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

1. உறுப்பினர் சேர்ப்பு பற்றிய விளத்த அறிக்கை.
2. நன்கொடைத் தண்டல்பற்றிய மாத அறிக்கை.
3. தோற்றியுள்ள கிளைக்கழகங்கள் பற்றிய மாத அறிக்கை.
4. நிறைவேற்றப்பெற்ற தீர்மானப் படிகள்.
5. பொருள் வரவு செலவு இருப்பு பற்றிய மாத அறிக்கை.

இவ்வறிக்கைகளின் போலிகைப் படிகள் மாவட்ட அமைப்பாளர்களுக்கு விடுக்கப் பெறும். இவைபோன்ற அறிக்கைகளை ஒவ்வொரு கிளைக்கழகமும் தம்தம் மாவட்ட அமைப்பாளர்க்கு ஒவ்வொரு மாத இறுதி நாளிலும், அவற்றைக் கொண்டு தொகுத்த அறிக்கைகளை ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளரும் தலைமையகத்திற்கு ஒவ்வொரு மாத முதல் நாளிலும் தவறாது விடுத்தல் வேண்டும்.

ஆ. கிளைக்கழகம் அமைக்கும் அன்பர்களுக்கு:

0 தங்கள் ஊரில் கிளைக்கழகம் ஒன்றை அமைக்க விரும்பும் அன்பர்கள் பத்து உறுப்பினர்களைச் சேர்த்த விளக்கத்துடன் அவ்வம் மாவட்ட அமைப்பாளர்களுடன் தொடர்பு கொள்க. உறுப்பினர் சேர்ப்புப் படிவங்கள், பற்று முறிகள், கழக நெறிமுறைகள் யாவும் மாவட்ட அமைப்பாளர்களிடம் கிடைக்கும்.

0 புதுவை, நெல்லை, தகடூர் மாவட்ட அமைப்பாளர்கள் தம் பொறுப்புகளினின்று நீங்கியமையால் அம் மாவட்டங்களுக்கும், குமரி மாவட்டத்திற்கும் தகுதியும் பொறுப்பும் வாய்ந்த அமைப்பாளர்களை அறிவிக்கும்படி அம்மாவட்ட அன்பர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மே/பா. தென்மொழி.
கடலூர்-௧.
தனி உ௦. தி. பி. ௬௧

—பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர்,
உலகத் தமிழ்க்கழகம்.

கொடுக்காமல், தன்னைச் சுற்றித் தமிழர்களின் தன்னுரிமைப் போராட்டத்திற்கென்று பல கட்டுப்பாடுகளையும் கொள்கைகளையும் வகுத்துக் கொண்டு பெயருக்கேற்பவே "பெருஞ்சித்திரனாக" தனது வாழ்வை ஆக்கிக்கொண்டு தனித்து நின்று போராடும் தமிழ் மறவனைப் பார்த்துக் கூறிய மொழிகேட்டு நெஞ்சம் வெடித்தது.

தவறிழைப்பது மக்கள் வழக்கம். அதைப் மன்னித்து மறந்து விடுவது கடவுள் தன்மை! அறியாப்பிள்ளை பெங்களூரார் தெரியாமல் செய்த பிழையைப் பொறுத்து மன்னித்து விடுவோம்!

–இளமுருகன், நீடாமங்கலம். (கO: நளி கக)

O அற்றைத் திங்கள் அத்தென் மொழியில்
அவர்மடல் கண்டேன்! அகமிக நெகிழ்ந்தேன்!
இற்றைத் திங்கள் இத்தென் மொழியில்
அவர்மடல் கண்டே அகமிக நொந்தேன்!
உடைப்பெடுத் தோடிய இடையொரு திங்களுள்
அவரிம் மாற்றம் எவண்பெற் றுரரோ?
எவரிடத் தவரும் இயைபுற் றுரரோ?
நச்சுளத் தாரின் நகைப்பிற் றிரங்கி
மெச்சுளத் துணர்வில் மிதிபட் டாரோ?
புல்நுனி மேயும் புல்லியர் தம்மின்
பல்லிளிப் பிற்கும் பசப்புரை யதற்கும்
சால்புறு நெஞ்சம் சார்புடைத் தாக்கி
முன்னிலை யாவும் முரணுறப் பிறழ்ந்தே
"ஒற்றைத் தனிநீள் உணர்வு"டை நெஞ்சின
பெற்றியை இகழ்ந்து பெட்பிழந் தாரே!
புன்மைக் கிரங்கிப் புலன்மயக் குற்றுப்
பெருமைக் கவரே பிழைசெய் தாரே!
ஒல்லும் நெறிமுறை ஓம்பாப் பூரியர்
சொல்லுரை யாவும் நல்லுரை யென்றே
பொல்லாப் பழியொடு புரைசூழ்ந் தாரே!
என்அவர் செயலே? என்அவர் இயலே?
ஐயகோ! நல்லீர்! அறிகிலேன் யானே!

–தி. எழிலரசன், திருச்சி–௩ச. (௩௰ துலை கக)

O ஆசிரியப் பெரும, வணக்கம். உலகத் தமிழ்க் கழகச் சிறப்பு மலரின் வாயிலாகத் திருச்சியிற் கூடிய தனித்தமிழ்ப் புலவர் மாநாட்டின் பெற்றியை அறிந்து மகிழ்கின்றேன். தங்களை எடைபோடுவார் தம்மைத்தாமே வெளிப்படுத்தித் தம் கரவுசான்ற புல்லிய மனத்தினை வெளிப்படுத்திக் கொண்டாரேயன்றி எங்கள் உண்மைத் தமிழுள்ளத்தில் ஓர் எள்ளத்துணையேனும் தளர்வினை ஏற்படுத்த இயலாதென்பதை அக்கருத்துக் குருடர்களை நோக்கிக் கூற விரும்புகின்றேன். கப்பும் காரிருள் எப்புறம் சூழினும் காலைக் கதிரவனைக் கண்டஞ்சி யொழிவது திண்ணம். நிலவினைச் சூழ்ந்து மகிழினும் மஞ்சு கதிரவனைக் கண்டஞ்சியே யாகல்வேண்டும். காய்ச்சல்காரன் வாய் கசந்தால் அது கனியின் குற்றமன்று! பொய்ம்மை எப்போதும் நிலைபெற முடியாது. போலியர் தம் முகமூடிகள் கிழியும்நாள் சேய்மையிலில்லை. அக்கால் அவர் தம் 'மானவுணர்வை'க் கண்டு நாடு நகைக்கவே செய்யும்! அண்டும்பகை அஞ்சும் வண்ணம் அயராது உழைப்போம்! வெல்க தென் மொழி. நன்றி!

–சி. தமிழ்வென்றி, பேட்டை, நெல்லை (௬- நளி ௨௨)

மொழிப்பேரறிஞர்

ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின்

அண்மை வெளியீடுகள்! அரிய ஆராய்ச்சி நூற்கள்!!

THE PRIMARY CLASSICAL LANGUAGE OF THE WORLD (ஆங்கிலம்)	உருபா 15—00
தமிழ் வரலாறு	உருபா 6.25
வடமொழி வரலாறு	உருபா 7.50
பண்டைத்தமிழ்நாகரிகமும்பண்பாடும்	உருபா 6.25
இசைத்தமிழ்க் கலம்பகம்	உருபா 3.00
இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?	உருபா 1-00
வண்ணனை மொழிநூலின் வழுவியல்:	,, 2.00

O தென்மொழியன்பர் ஒவ்வொருவர் கைகளிலும் மிளிரவேண்டிய அரிய நூற்கள்!

உடனே வாங்கிப் படியுங்கள்.

அஞ்சல் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்:-

திரு. தே. மணி,
ஆ. 1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

செயலாளர்:

மறைமலையடிகள் மன்றம்,
புன்செய்ப் புளியம்பட்டி, ஈரோடு வழி.

பாவாணர் தமிழ் மன்றம்,
18. முதற் பெருஞ்சாலை, வசந்த நகர், பெங்களூர்-1.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நமக்கு வந்த மடல்கள்.

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது. வசைகள் என்னை உறுதியாக்குகின்றன; பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படுகுழிகளை எனக்கு எச்சரிக்கின்றன; நேர்மை எனக்கு வழிகாட்டுகின்றது; உண்மை எனக்குத் துணை வருகின்றது; கடமை என்னை வழிநடத்துகின்றது; நட்பு என் அயர்வைப் போக்குகின்றது; தமிழ் எனக்கு ஒளி தருகின்றது; தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது; இறையுணர்வு எனக்கு நம்பிக்கை யூட்டுகின்றது; என் வாழ்க்கைக்குப் பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்! வெறும் வாய்கள் மனத்தை எடைபோடா! –பெருஞ்சித்திரன்.)

○ நீண்ட நாட்களுக்குப் பின்னர், நானும் உங்கள் அன்புக்காக ஏங்கிக்கொண்டு இன்னும் உயிரோடு இருக்கின்றேன்....ஏனோ எங்களை மறந்து விட்டீர்கள்? என்ன குற்றம் செய்தோம்? அப்படியே ஏதாவது பிழை செய்திருந்தாலும் நீங்கள் பொறுத்தருளக்கூடாதா? தங்கள்பால் எனக்கு மிகுந்த வருத்தமாகவே இருந்தது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சென்ற இதழ் 'நம்பிக்கையும் நன்றியும்' ஆசிரியவுரை என் எண்ணத்தையும் தங்கள்பால் நான் கொண்ட தவறான கருத்தையும் தகர்த்தெறிந்துவிட்டது. அதைப் படித்ததும் என் உள்ளம் கனத்தது. நெஞ்சாங்குலை மிக விரைவாக அடித்துக்கொண்டது கண்களில் நீர் நிறைந்து கொட்டியது. தங்களைப் பற்றித் தங்களுடன் உறவாடிச் சில நாட்கள் இருந்தவர்கள் வெளியில் வந்து புறங்கூறித் திரிவதைக்கேட்டு என் உள்ளம் கொதிக்கிறது. மாசு மறுவற்ற வற்றாத அன்பு ஊற்றாகிய உங்களைப் பற்றியா புறங்கூறித் தூற்றுகின்றனர். ஐயகோ! கேட்கவே பிடிக்கவில்லையே. தங்களிடம் உறவாடித் தங்கியவர்கள் இவ்வளவு கீழ்மையாக நடப்பதற்குக் கரணியம் அவர்கள் தங்களிடம் ஒரு திட்டமிட்ட குறிக்கோளுடன் எதையோ எதிர்பார்த்துத்தான் உறவாடியிருக்கிறார்கள். எதிர்பார்த்தது கிடைக்காதுபோகவே வெளியில் சென்று தூற்றத் தொடங்கியுள்ளனர். ஒருவர்மேல் ஒருவர் தூற்றித் திரிவதும, மற்றவர் எங்கே புகழ்பெற்று உயர்ந்து விடுவாரோ என்ற காழ்ப்பில் புறங்கூறுவதுமாக இருப்பதுந்தான் தமிழில் ஓரளவு புலமை பெற்றவர்களுக்குள்ள இயற்கையாக உள்ளது. தமிழின் வளர்ச்சிக்கான தடைகள் இவையே எனின் தவறாகாது. குடும்பத்தைப் பற்றிய அக நிகழ்ச்சிகளைத் தென்மொழியில் எழுதியிருக்க வேண்டாவென எனக்குப் பட்டது. ஆனால் உங்கள் எண்ணப்படி தென்மொழியே உயிர், மூச்சு, இயக்கம்–என்று இருக்கும் பொழுது நீங்கள் வெளிப்படையாக அவ்வாறு எழுதித் தங்களின் நேர்மையையும் ஒழுகலாற்றையும் உலகுக்கு எடுத்துக் காட்டியது பாராட்டுக்குரியதுதான். தென்மொழியின் வளர்ச்சிக்கு என்னால் சிறிதும் உதவ முடியவில்லையே என்று என் உள்ளத்தில் ஓயாத உறுத்தலாக இருக்கிறது. சாண் ஏறினால் முழம் சறுக்கும் என இடர்ப்பாடு நிறைந்த வாழ்க்கையில் நான் என்ன செய்வேன்?

–க. பழனியப்பன், திருச்சிராப்பள்ளி–1, (20–12–68)

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)